பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை (26.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 273

## அரசியல் தைரியம் இருந்தால்.....

# பொதுத் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு ஐ.தே.கட்சி சவால்

### மாகாண சபைத் தேர்தல் தமக்கே சாதகம் எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 26

அரசுக்கு அரசியல் தைரியம் இருந்தால் - வெல்ல முடியும் என்ற நம்பிக்கையிருந்தால் - நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்திப் பார்க்கட்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்குச் சவால் விடுத்துள்ளது.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் நடந்த தேர்தல்களில், அரசின் வன் முறைகளுக்கு மத்தியிலும் தமது கட்சி கடந்த முறையை விட அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள ஐ.தே.கட்சி, நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் நிச்சயமாகத் தங்களால் வெல்லமுடியும் என்றும் அடித்துக் கூறியிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இச்சவாலை விடுத்தார்.

நேற்றைய சந்திப்பில் அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு: -

2004 ஆம் ஆண்டுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் நாம் சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களில் மேலதிகமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரின் சூட்டில் திருமலையில் ஒருவர் பலி!

திருகோணமலை, சவளக்கடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அன்றையதினம் உயிரிழந்த நபர் தங்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்த முற்பட்ட சமயம் தாங்கள் நடத்திய தாக்குதலிலேயே அவர் உயிரிழந்தார் என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலத்திற்கு அருகில் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டது என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

### பொதுத் தேர்தலுக்கு இப்போது அவசியமில்லை; ஆனால் அரசு வலுவான நிலையில் - பஸில்

கொழும்பு, ஓக. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிலைமையைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே பொதுத் தேர்தல் குறித்து முடிவெடுப்பார் எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலில் அரசு காத்திரமான வெற்றியைப் பெற்றுள்ளதால் நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### குருநகர் கடற்கரையில் சூட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.26

குருநகர் கடற்கரைப் பகுதியில் இராணுவக் காவலரனுக்கு அருகில் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞர் ஒருவருடைய சடலத்தை நேற்றுக்காலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்.மாவட்ட நீதிவான் இ.வசந்தசேனன் சடலத்தை பார்வையிட்டதுடன் அதனை பிரேதபரிசோதனைக்குஉட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதனை அடுத்து சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று கடல் நீரேரிக்கு அருகில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

### ஐ.தே.கட்சி தயாரென்றால் மூன்று மாதங்களில் தேர்தல்
#### அதையும் பார்த்துவிடலாம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக. 26

பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அரசு ஒருபோதும் பயந்ததில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலுக்குத் தயாரென்றால் - தேர்தலைச் சந்திக்க விரும்பினால் - இன்னும் மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்க அரசு தயாராகவே இருக்கிறது'' - என்று போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

''அரசு துணிவிருந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொதுத் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறதா என்று ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்திருக்கின்றமை தொடர்பாக, அதற்குப் பதிலளித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''அரசுக்கு எவ்வளவு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதை எதிர்க்கட்சிகள் இப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னி மீதான படை நடவடிக்கை எதிர்பார்த்ததைவிட முன்னரே முடிந்துவிடும்
#### தேர்தல் தந்த உந்துசக்தி காரணம் என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, ஓக. 26

பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் - வன்னி மீது படையினர் மேற்கொள்ளும் - படைநடவடிக்கை எதிர்பார்த்த - திட்டமிட்ட - காலப்பகுதிக்கு முன்பாகவே நிறைவடையலாம்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக்கூறினார்.

முன்னர் கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாக படையினரின் மனோநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இதைக்கருத்தில்கொண்டு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் இன்று தமது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மக்கள் தேர்தல் மூலம் படையினருக்கு ஊக்கத்தையும் உந்துசக்தியையும் அளித்துள்ளனர்.

படையினர் இப்போது மிகுந்த மனோதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறைக் காட்டில் புலிகள் தாக்குதல்

அம்பாறை, ஓக.26

அம்பாறை வனப் பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் அதிரடிப் படையினர் மூவர் படுகாயமடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளை தேடியழிக்கும் ஸ்ரீ லங்கா படையினரின் வழமையான நடவடிக்கையின் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### திஸநாயகத்துக்கு நேற்று குற்றப்பத்திரம் கையளிப்பு
#### பிணை அனுமதி மறுப்பு

கொழும்பு, ஓக.26

கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான குற்றப்பத்திரம் நேற்று அவரிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி தீபாலி விஜேசுந்தர முன்னிலையில் அவர் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போதே குற்றப் பத்திரம் அவரிடம் கையளிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை செப்ரெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவருக்குப் பிணை அனுமதி கோரி அவரின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்தனர்.

ஆனால் அத்தகைய அனுமதி வழங்கப்படுவதை அரச சட்டத்தரணி ஆட்சேபித்தார்.

''எதிரி மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு படைநடவடிக்கைகளுக்கு ஆதரவாக பிரசாரவாகனப் பேரணி

கொழும்பு,ஓக.26

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் பகுதிகளை கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரை மேலும் பலப்படுத்துவதற்கான பிரசார நட வடிக்கையொன்றை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட பல அமைப்புக்கள் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரசார நடவடிக்கையின் முதற்கட்டமாக வாகனப்பேரணியொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 30 ஆம் திகதி பேலியகொடவில் ஆரம்பமாகும் இந்த வாகனப் பேரணி அன்று மாலை கண்டி தலதாமாளிகையை சென்றடைவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுஎனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்,

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் துணை நிற்க ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்கள சர்வதாரி வருஷம் ஆவணி மாதம் 12 ஆம் நாள் (28.08.2008) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 8.20 மணிமுதல் 9.20 மணிவரையுள்ள துலாலக்கின சுப முகூர்த்தத்தில்

**சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்** (சுப்பையாக் குருக்கள்)
**குமாரதாஸ சர்மா** அவர்களுக்கு

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் தேவஸ்தான மண்டபத்தில் விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்யாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியிருப்பதால் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்ப சமேதராக வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*தீட்சா குரு சிவஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக் குருக்கள் (கல்வியங்காடு)*

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ சோம.குமாரதாஸ சர்மா
அளவெட்டி. (77471) வத்சலா தம்பதிகள்.

# மாதிரி தோட்டப் போட்டியில் சாவகச்சேரி மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக 26

யாழ்.மாவட்ட அரச அலுவலகங்களி டையே நடத்தப்பட்ட மாதிரி அலுவலகவளாக தோட்டப் போட்டியில் சாவகச்சேரி நகரசபை மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் திருநெல் வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படும்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராசா நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

மாகாண விவசாயத் திணைக்களத் தினால் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் (2007- 2010) இப்போட்டிகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (1-207)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.26

இளவாலை திரு மறைக் கலாமன்றம் நடத்தும் வருடாந்த கலாச்சார விளை யாட்டு விழா மன்ற மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு இணை இணைப் பாளர் ஆசிரியர் செ.பி.பியன்வெனு தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தி னராக மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட் பணி ஞானேந்திரன் அடிகளார் கலந்து கொள்வார். (1)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் தேர்தல் அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்குமான அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தேர்தல் 26.10.2008 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9 மணி தொடக்கம் பி.ப. 12 மணிவரை வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்தில் (சண்டிலிப்பாய்) நடைபெறும். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழி படுவோர் சங்க வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்கள் மட்டுமே இத் தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கவும் உரிமையுடை யவராவர்.

தேர்தலில் போட்டியிடவிரும்பும் அங்கத்தவர்கள் தேர்தல் வைப்புப் பணமாக ரூபா 1000.00 ஐ இலங்கை வங்கி, மானிப்பாய் கிளையிலுள்ள வழிபடுவோர் சங்க கணக்கு இலக்கம் 638 இல் வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை நியமனப்பத்திரத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாத நியமனப் பத்திரங்கள் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களைப் பெறுதல்**
நியமனப்பத்திரம் பெறும் இடம்: பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.
நாள் : 2008 செப்ரம்பர் 03 ஆம் திகதி (03.09.2008) முதல் 2008 செப்ரம்பர் 12 ஆம் திகதி (12.09.2008) வரை
நேரம்: முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை

**அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தல்**
இடம்: பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்
நாள்: 2008 செப்ரம்பர் 15 ஆம் திகதி (15.09.2008)
நேரம்: முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை

அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களை வாபஸ் பெறும் கால எல்லை 2008 செப்ரெம்பர் 22 ஆம் திகதி (22.09.2008) மதியம் 12 மணி வரையாகும். (77466)

கௌரவ செயலாளர்,
மருதடி விநாயகர் ஆலய
வழிபடுவோர் சங்கம்.

திருமதி ரூபினி வரதலிங்கம்
தேர்தல் அதிகாரி, பிரதேச செயலர்,
வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி வளர்மதி இராஜேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
**அம்பலவாணர் செல்வராசா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(77472) யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி., நீர்வேலி.

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | மண்ணின் மடியில் |
|---|---|---|
| 22 |  | 07 |
| ★ | | ★ |
| 10 | | 09 |
| ★ | | ★ |
| 1945 | | 2007 |

திதி: பூர்வபக்க ஏகாதசி (26.08.2008)

**அமரர் செல்லையா ஜெயபாலசிங்கம்** (சமாதான நீதிவான்)
(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப வல்லுநர், உரிமையாளர், விநாயகர் விலாஸ், கைதடி, உரிமையாளர், யூனியன் பேக்கரி, கைதடி)

கடந்து விட்டது ஓராண்டு
காயவில்லை எம் விழிகள்
இன்று வரை நம்ப முடியவில்லை - அப்பா
உங்கள் ஆசைப்படியே
அம்பாள் பாதம் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

"சிவவாசா",
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (77467)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## முருகேசு நடராசா (ஆசாரி)



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நடராசா (ஆசாரி) நேற்று (25.08.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மாதம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், கனகரட்ணம் (அசோக் தொழிற்சாலை, சுன்னாகம்), கணேசலிங்கம் (ராசா), சிவமலர், சறோஜினிதேவி, தனேஸ்வரன் (பிரான்ஸ்), மல்லிகாதேவி, காலஞ்சென்ற சுசீலாதேவி மற்றும் மதனதாசன், ரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநிதி, பத்மாவதி, இந்திரபவனி (பிரான்ஸ்), சுதாநிதி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி, ஏழாலை கிழக்கு,
ஏழாலை. T.P. 021 4591 762 (77465)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

# விற்பனைக்கு

கட்டட வேலைக்குரிய(கொங்கிறீற், பிளாற்-SLAB, போடுவதற்குரியது)முட்டு மரங்கள், பலகைகள்(சற்றிங் தேவைக்கு-Shutaring) பாவித்தது. உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- தம்பி
, இல 66/13, பிறவுன் வீதி, 5ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
T.P: 077 3209292, 0112 945496.

# THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில. By ந.விக்நேஸ்வரன் ஆச்சாரி 426(302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை
"THE ROYAL IS THE BEST"

# தவறிவிட்டது

நிரோசன் அருமைநாயகம் என்பவருடைய தே.அ.அ.இல (890712550V) கச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு: 60/9, விசுவாசிகள் சபை, கலாசாலை வீதி, திருநெல்வேலி. T.P: 0602214218

# காணி விற்பனைக்கு

கோண்டாவில் குட்செட் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய 3பரப்புக் காணி களஞ்சியப்படுத்தல் வசதி கொண்ட கட்டடத் தொகுதியுடன் (கிணறு, மலசல கூட வசதி உட்பட) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- தம்பி
இல 66/13, பிறவுன் வீதி, 5ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P: 077 3209292, 0112 945496.

# தவறிவிட்டது

நுணாவில் மேற்கைச் சேர்ந்த தம்பித்துரை வேலாயுதம் என்பவரது 'J' எனப் பெயர் பொறிக்கப்பட்ட தங்க மோதிரம் கடந்த வெள்ளிக்கிழமை (22/8) சாவகச்சேரி மக்கள் வங்கிக்கும் இலங்கை வங்கிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திருமதி க.பொன்னம்பலம்
அவர்களின் சகோதரர்
**வேலுப்பிள்ளை சிவானந்தநாயகம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வேம்படி உயர்தரப் பாடசாலை,
ஆசிரியர் கழகம்.

# பெயர் மாற்றம்

மந்துவில் மேற்கு, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த பரமராஜா பரலோகராணி, பரமராஜா பரலோகநாயகி ஆகிய நாம் எமது பெயரை முறையே பரமராஜா சுகிதா, பரமராஜா சுயானி என 15.08.2008 முதல் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

பரமராஜா சுகிதா, பரமராஜா சுயானி
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.




# மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

## பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

அவர்கள் அடுத்த மாத முதல் வாரத்தில் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். உடன் தொடர்பு கொள்ளவும்.

மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுகேற்றவாறு மருந்துகளை கொண்டுவருவார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexual Disorders(ஆண்மைச் சக்தி குறைவு)**

(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் **ஸ்ரீ பாலாஜி இன்**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.Contact No.: 0777 569205

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 |  | 07 |
| ★ | | ★ |
| 03 | | 09 |
| ★ | | ★ |
| 1941 | | 2007 |

**அமரர் பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம்)
திதி: 26.08.2008 - ஏகாதசி

ஆண்டு ஒன்று போனதா? - அப்பா ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்ப முடியவில்லை - நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்களென்று
ஆனாலும் உங்கள் ஆசைப்படியே - அப்பா
மீண்டும் வந்துவிட்டீர்கள் உங்கள் பிள்ளையின் பிள்ளையாக...!

'மயூர பவனம்'
உடுவில், சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன் - அக்ஷயன். (77414)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பிள்ளையார் இன் ஹோட்டலில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. கருத்தரங்கில் கொழும்பிலுள்ள சட்டமும் சமுதாயமும் அறக் கட்டளையின் மூத்த ஆய்வாளர் டுலானி குலசிங்க, இணைப்பாளர் றுகி பெர்னாண்டோ, சிறுவர் பாதுகாப்பு நிலையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் 3 படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

# ஓய்வூதியம் பெறும் அரச அலுவலர்களுக்கு சிரேஷ்ட பிரஜைகள் காப்புறுதித் திட்டம்

வலி.வடக்கு, ஓக.26

ஓய்வூதியம் பெறும் அரச அலுவலர்களின் நன்மை கருதி சிரேஷ்ட பிரஜைகள் காப்புறுதித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்தில் இணையும் ஓய்வூதியர்கள் 70 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பதுடன் மாதாந்தம் 250ரூபா சந்தாப் பணமாக செலுத்த வேண்டும். இணைந்து கொள்பவர்கள் 70 வயது பூர்த்தி அடையும் வரை விலக முடியாது.

இக்காப்புறுதியில் இணைந்து கொள்பவர்களுக்கு இருதய சத்திர சிகிச்சைக்கு மூன்று லட்சத்து 50-ஆயிரம் வரையான கொடுப்பனவு, புற்றுநோய், சிறுநீரக மாற்றுச் சிகிச்சைபோன்ற நோய்களுக்கு ஒரு லட்சம் ரூபா-

சாதாரண வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டமைக்காக (வருடம் ஒன்றிற்கு) 10 ஆயிரம் ரூபா, (ஒரு தரத்திற்கு ஆகக் கூடியது 5 ஆயிரம்ரூபா), தனியார் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றமைக்கு வருடம் ஒன்றிற்கு 50 ஆயிரம் ரூபா(ஒரு தரத்திற்கு ஆகக் கூடியது 10 ஆயிரம் ரூபா)-

மூக்குக் கண்ணாடிக்காக 4 ஆயிரம் ரூபா (5 வருடத்திற்கு ஒரு முறை- காப்புறுத்திக்குரியவருக்கு மட்டும்), திடீர் விபத்து மரணத்தின் போது 50 ஆயிரம் ரூபா, இயற்கை மரணத்தின் போது 20 ஆயிரம் ரூபா என்றவகையில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலதிக விவரங்களை பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் மூலமாகவும் '70, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10' இல் உள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்புநிதியத்துடனும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (202-86)

# பல்வேறு கொள்ளைகள் தொடர்பாக ஐந்து பேர் கைது, நகைகளும் மீட்பு

## தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக 26

குடாநாட்டில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஐவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஒரு தொகை நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் சம்மந்தப்பட்டவர் எனக் கருதப்படும் ஒருவர் ரோந்து சென்ற படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், அந்த நபருடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் ஐவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை விசாரணை செய்த பொலிஸார் அவர்களிடமிருந்து ஒரு தொகை நகைகளை மீட்டுள்ளனர்.

பிரஸ்தாப நபர்களை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்தனர். மீட்கப்பட்ட நகைகளையும் நீதிமன்றத்தில் கையளித்தனர்.

இவர்கள் துப்பாக்கி முனையில் கொள்ளைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதனை அடுத்து இவர்களை தடுப்புக் காவல் சட்ட விதியின் கீழ் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வீடுகளில் கொள்ளைகளின் போது நகைகள் பறி கொடுத்தவர்கள், அடையாளம் காட்டுவதற்காக நேற்று மல்லாகம் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர். (அ-01)

# தென்மராட்சி தெற்கில் சட்டவிரோதமாக மின் இணைப்பு பெற்ற 26 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஒக.26

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின் இணைப்புப் பெற்ற 26 பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி பிரிவினர் இப் பிரதேசத்தில் நடத்திய திடீர் பரிசோதனையின் போதே சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் பிடிபட்டனர்.

நாவற்குழி, கோவிலாக்கண்டி, மறவன் புலோ, தச்சன்தோப்பு உட்பட்ட பகுதிகளில் திடீர் பரிசோதனை நடத்தப்பட்டன. இவர்களிடமிருந்து பெருமளவு மின்சார உபகரணங்கள் கைப்பற்றப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக மின்சாரசபை உழியர்கள் திடீர் பரிசோதனை நடத்தி சட்டவிரோத மின் பாவனையை தடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (202-207)

# குருநகர் பிரதேச அபிவிருத்திக்கு சிறில் எம்.பி. நிதி ஒதுக்கீடு

குருநகர், ஒக 26

குருநகர் பகுதியின் அபிவிருத்திப் பணிகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் கலாசார மண்டபத்தை மீளப்புனரமைப்புச் செய்வதற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாவும்-

ஜே/68 றெக்கிளமேசன் மகளிர் புனர்வாழ்வு நிலையத்துக்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும், குருநகர் நெய்தல் மன்றத்துக்கு தையல் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும்- குருநகர் சென்றோக் முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவிற்காக 50 ஆயிரம் ரூபாவும், குருநகர் பெஸ்கி சனசமூக நிலைய மெழுகுவர்த்தி தயாரிப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும்-

புதுமைமாதா சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவிற்கு 50 ஆயிரம் ரூபாவும், றெக்கிளமேசன் சனசமூக நிலையத்துக்கு தளபாட மற்றும் புத்தகங்கள் கொள்வனவிற்காக 30 ஆயிரம் ரூபாவும்-

குருநகர் மத்திய மருந்தகத்தின் தண்ணீர் வழங்கலுக்காக 80 ஆயிரம் ரூபாவும், யாழ்.சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை யின் கட்டட மீள் புனரமைப்புக்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும்-ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-51)

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்நிற்க வேண்டும்

## யாழ்.சங்கத் தலைவர் கிரிதரன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.26

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே உருவாக்கப்பட்டவை. எனவே சங்கங்கள் வர்த்தகத்தை மட்டும் நோக்காகக் கொள்ளாமல் சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்வதற்கும் முன்நிற்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப. கிரிதரன் சங்கங்களுக்கு அறிவுறுத்தினார்.

கூட்டுறவுச் சங்கத்தின் நலிவுற்றோர் திட்டத்தின் கீழ் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வைத்தியசாலை விடுதியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சங்கத் தலைவர் கிரிதரன் மேற்கண்ட அறிவுறுத்தலை சங்கங்களுக்கு விடுத்தார்.

பலநோக்குக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தக நடவடிக்கையில் மட்டுமே ஈடுபடுவது நோக்கம் அல்ல. சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பட்ட பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் உறுப்பினர்களின் கஷ்டங்களை கேட்டறிந்து செயற்படுவதே சிறந்த சேவையாகும்.

அத்தியாவசிய தேவையைப் பெறுவதில் மக்களுக்கு ஏற்படும் சிரமத்தின்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே உதவுகின்றன.



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நலிவுற்றோர் திட்டத்தின் கீழ் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு இலவசமாக உலர் உணவுப் பொருள்கள் கடந்த சனிக்கிழமை விநியோகிக் கப்பட்டன.

சங்கத் தலைவர் ப. கிரிதரன் நோயாளர் ஒருவருக்கு உலர் உணவுப் பொதி ஒன்றை வழங்குவதையும் சங்க இயக்குனர் எ.டோமினிக், வைத்தியசாலை நிர்வாக அதிகாரி ஆர். பத்மநதன் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் என். ஜெயகுமாரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: [illegible])

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தக நடவடிக்கையிலேயே அதிக கவனம் செலுத்துவதை நாம் அறிவோம்.

ஆனால் சங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நலிவுற்ற குடும்பங்களுக்கும் தம்மாலான சேவையாற்றுவதே சிறந்த சேவையாகும்.

ஆகவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் சமூக சிந்தனையுடன் தங்களது சிறந்த பணியை இதய சுத்தியுடன் வழங்க வேண்டும். இந்த உயரிய நோக்கத்தின் அடிப்படையிலேயே மேற்படி திட்டம் உருவாக்கி நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.

இந்த சமூகத்தில் வாழுகின்ற அனைத்துத் தரப்பிலுள்ள மக்களது தேவைகளிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இந்த 65 பேருக்கும் சங்கம் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதியை வழங்கிய சேவையானது எமது சங்கத்தின் சேவைகள் பலவற்றிலும் புனிதமானதொன்றாகும்.

இத்தகைய செயற்பாடுகளில் ஏனைய சங்கங்களும் ஈடுபட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகவே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது- என்றார்.

இந் நிகழ்வில் சங்கத்தின் இயக்குனர் ஏ.டீடாமினிக், பொது முகாமையாளர் து.மனோகரன், வைத்தியசாலை நிர்வாக இயக்குனர் ஆர். பத்மநாதன், புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என். ஜெயக்குமாரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (202-224)



# சாவகச்சேரி லிகோரியார் பங்கில் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஓக.26

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தினர் இரத்ததானம் செய்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினரால் தேவாலய குழந்தை யேசு முன்பள்ளியில் இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டது.

தேவாலய பங்கைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் குருதிக் கொடை வழங்கினர். (202-207)

# கோப்பாய் பிரிவில் சிமெந்து விநியோகம்

கோப்பாய்,ஓக.26

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராமசேவையாளரின் சிபார்சுடன் பிரதேச செயலரின் அனுமதி பெற்றவர்களுக்கான சிமெந்து நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து கடந்த வெள்ளிக் கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட சிமெந்தே விநியோகிக்கப்படுவதாக ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பீஜிங் பீஜிங் ஒ மை பீஜிங்' பாடலுடன் விடைகொடுத்தது சீனா; வரவேற்றது லண்டன்



கண்கவர் கலை நிகழ்ச்சிகள், இரவைப் பகலாக்கும் வாணவேடிக்கைகளுடன் 29ஆவது ஒலிம்பிக் போட்டி ஞாயிற்றுக் கிழமை கோலாகலமாக நிறைவு பெற்றது.

90 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் வசதியுடைய 'பறவைக்கூடு' அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், தொடக்க நிகழ்ச்சியைக் காட்டிலும் ரசிகர்களை கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சீனப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலைநிகழ்ச்சிகளும் முக்கிய இடம்பெற்றிருந்தன.

இறுதியாக ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டதும், நிகழ்த்தப்பட்ட வாணவேடிக்கைகள் அரங்கை மட்டுமல்லாது, நகர் முழுவதையும் பகலாக்கியன. அதைத் தொடர்ந்து, 6பாடகர்கள் ஒருங்கிணைந்து 'பீஜிங் பீஜிங் ஒ மை பீஜிங்' என்ற அழகான பாடலைப்பாடி அரங்கில் குழுமி யிருந்தவர்களைக் கவர்ந்தனர். ஏராளமான சீன இசைக் கலை ஞர்கள் தமது இசைத்திறனை வெளிப்படுத்தினார்கள்.

நச்சுக் காற்று, தரமில்லாத குடிதண்ணீர், நெரிசல் மிகுந்த போக்குவரத்து, உணவு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து போட்டிக்கு முன்னர் பல்வேறு நாடுகளின் அதிருப்தியைச் சந்தித்த சீனா, போட்டியின் நிறைவில் அவை எல்லாம் வெறும் கதை என்பது போல பிரமிப்பை வெளிப்படுத்தியது.

இது மாதிரி போட்டியை இனிமேல் வேறு யாராவது நடத்த முடியுமா என்ற ஐயத்துடன் வீரர்களும், ரசிகர்களும் விடை பெற்றனர்.

**லண்டனில் அடுத்த போட்டி**

அடுத்த போட்டி லண்டன் நகரில் 2012 ஆம் நடைபெறவுள்ளது. அதற்கான ஒலிம்பிக் கொடி வழங்கும் நிகழ்ச்சி, நிறைவு நிகழ்ச்சியில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. லண்டன் மேயர் போரிஸ் ஜான்சனிடம் மேயர் குவோ ஜின்லாங் அக்கொடியை வழங்கினார்.



## இரவைப் பகலாக்கும் வாணவேடிக்கைகளுடன் நிறைவு பெற்றது 29ஆவது ஒலிம்பிக்போட்டி



நிகழ்ச்சியில் சீன அதிபர் ஹூ ஜிந்தாவோ, பிரிட்டிஷ் பிரதமர் கார்டன் பிறவுண், சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜக்குவிஸ் ரோஜ், கௌரவத் தலைவர் ஜுவன் ஆன்டானியோ சமராஞ்ச், பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்காம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கடந்த 8 ஆம் திகதி முதல் நடைபெற்று வந்த இப்போட்டியில் 204 நாடுகள் பங்கேற்றன. 302 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ், ஜமெய்க்கா தடகள வீரர் உசைன் போல்ட் ஆகியோர் இந்த ஒலிம்பிக்கில் மின்னிய நட்சத்திரங்களில் முக்கிய இடத்தைப் பிடித்தனர். பெல்ப்ஸ் 8 தங்கப் பதக்கங்களையும், போல்ட் 3 தங்கப் பதக்கங்களையும் கைப்பற்றினர். அனைத்தையும் சாதனைகளுடன் அவர்கள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**சீனா முதலிடம்**

அதிகபட்சமாக 639 வீரர், வீராங்கனைகளை களத்தில் இறக்கிய சீனா, பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. 51 தங்கம், 21 வெள்ளி, 28 வெண்கலம் என மொத்தம் 100 பதக்கங்களைக் கைப்பற்றியது. கடந்த போட்டியில் முதலிடத்தைப் பிடித்த அமெரிக்கா, இம்முறை இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது. என்றாலும் மொத்தத்தில் அமெரிக்காவுக்கே முதலிடம். 36 தங்கம் உட்பட 110 பதக்கங்களைப் பெற்றது.

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 51 | 21 | 28 | 100 |
| 2 | அமெரிக்கா | 36 | 38 | 36 | 110 |
| 3 | ரஷ்யா | 23 | 21 | 28 | 72 |
| 4 | பிரிட்டன் | 19 | 13 | 15 | 47 |
| 5 | ஜேர்மனி | 16 | 10 | 15 | 41 |
| 6 | ஆஸ்திரேலியா | 14 | 15 | 17 | 45 |
| 7 | வடகொரியா | 13 | 10 | 08 | 31 |
| 8 | ஜப்பான் | 09 | 06 | 10 | 25 |
| 9 | இத்தாலி | 08 | 10 | 10 | 28 |
| 10 | பிரான்ஸ் | 07 | 16 | 17 | 40 |
| 11 | உக்ரைன் | 07 | 05 | 15 | 27 |
| 12 | நெதர்லாந்து | 07 | 05 | 04 | 16 |
| 13 | ஜமெய்க்கா | 06 | 03 | 02 | 11 |
| 14 | ஸ்பெயின் | 05 | 10 | 03 | 18 |
| 15 | கென்யா | 05 | 05 | 04 | 14 |
| 16 | பெலாரஸ் | 04 | 05 | 10 | 19 |
| 17 | ருமேனியா | 04 | 01 | 03 | 10 |
| 18 | எதியோப்பியா | 04 | 01 | 02 | 07 |
| 19 | கனடா | 03 | 09 | 06 | 18 |
| 20 | போலந்து | 03 | 06 | 01 | 10 |
| 21 | நோர்வே | 03 | 05 | 02 | 10 |
| 21 | ஹங்கேரி | 03 | 05 | 02 | 10 |
| 23 | பிரேசில் | 03 | 04 | 08 | 15 |
| 24 | செக் | 03 | 03 | 00 | 06 |
| 25 | சுலோவாக்கியா | 03 | 02 | 01 | 06 |
| 26 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 27 | ஜோர்ஜியா | 03 | 00 | 03 | 06 |
| 28 | கியூபா | 02 | 11 | 11 | 24 |
| 29 | கசகசஸ்தான் | 02 | 04 | 07 | 13 |
| 30 | டென்மார்க் | 02 | 02 | 03 | 07 |
| 31 | தாய்லாந்து | 02 | 02 | 00 | 04 |
| 31 | மொங்கோரியா | 02 | 02 | 00 | 04 |
| 33 | தென்கொரியா | 02 | 01 | 03 | 06 |
| 34 | சுவிற்சர்லாந்து | 02 | 00 | 04 | 06 |
| 34 | ஆர்ஜன்ரீனா | 02 | 00 | 04 | 06 |
| 36 | மெக்சிக்கோ | 02 | 00 | 01 | 03 |
| 37 | துருக்கி | 01 | 04 | 03 | 08 |
| 38 | சிம்பாப்பே | 01 | 03 | 00 | 04 |
| 39 | ஆஜர்பஜன் | 01 | 02 | 04 | 07 |
| 40 | உஸ்பெகிஸ்தான் | 01 | 02 | 03 | 06 |
| 41 | சுலோவேனியா | 01 | 02 | 02 | 05 |
| 42 | பல்கேரியா | 01 | 01 | 03 | 05 |
| 42 | இந்தோனேஷியா | 01 | 01 | 03 | 05 |
| 44 | பின்லாந்து | 01 | 01 | 02 | 04 |
| 45 | லற்வியா | 01 | 01 | 01 | 03 |
| 46 | பெல்ஜியம் | 01 | 01 | 00 | 02 |
| 46 | டொமினிக்கன் | 01 | 01 | 00 | 02 |
| 46 | எஸ்ரோனியா | 01 | 01 | 00 | 02 |
| 46 | போர்த்துக்கல் | 01 | 01 | 00 | 02 |
| 50 | இந்தியா | 01 | 00 | 02 | 03 |
| 51 | ஈரான் | 01 | 00 | 01 | 02 |
| 52 | பஹ்ரைன் | 01 | 00 | 00 | 01 |
| 52 | கமரூன் | 01 | 00 | 00 | 01 |
| 52 | பனாமா | 01 | 00 | 00 | 01 |
| 52 | துனிசியா | 01 | 00 | 00 | 01 |
| 56 | சுவீடன் | 00 | 02 | 01 | 05 |
| 57 | குறோசியா | 00 | 02 | 03 | 05 |
| 57 | லிதுவேனியா | 00 | 02 | 03 | 05 |
| 59 | கிறீஸ் | 00 | 02 | 02 | 04 |
| 60 | ரிரினியா | 00 | 01 | 00 | 02 |
| 61 | நைஜீரியா | 00 | 01 | 03 | 04 |
| 62 | ஒஸ்ரியா | 00 | 01 | 02 | 03 |
| 62 | அயர்லாந்து | 00 | 01 | 02 | 03 |
| 62 | சேர்பியா | 00 | 01 | 02 | 03 |
| 65 | அல்கேரியா | 00 | 01 | 01 | 02 |
| 65 | பஹாமாஸ் | 00 | 01 | 01 | 02 |
| 65 | கொலம்பியா | 00 | 01 | 01 | 02 |
| 65 | கிரிகிஸ்தான் | 00 | 01 | 01 | 02 |
| 65 | மொறோக்கா | 00 | 01 | 01 | 02 |
| 65 | தஜகிஸ்தான் | 00 | 01 | 01 | 02 |
| 71 | கிலி | 00 | 01 | 00 | 01 |
| 71 | எகுவடோர் | 00 | 01 | 00 | 01 |
| 71 | ஐஸ்லாந்து | 00 | 01 | 00 | 01 |
| 71 | மலேசியா | 00 | 01 | 00 | 01 |
| 71 | தென்ஆபிரிக்கா | 00 | 01 | 00 | 01 |
| 71 | சிங்கப்பூர் | 00 | 01 | 00 | 01 |
| 71 | சூடான் | 00 | 01 | 00 | 01 |
| 71 | வியட்நாம் | 00 | 01 | 00 | 01 |
| 79 | அர்மினியா | 00 | 00 | 06 | 06 |
| 80 | தாய்பேய் | 00 | 00 | 04 | 04 |
| 81 | ஆப்கானிஸ்தான் | 00 | 00 | 01 | 01 |
| 81 | எகிப்து | 00 | 00 | 01 | 01 |
| 81 | இஸ்ரேல் | 00 | 00 | 01 | 01 |
| 81 | மொல்டோவா | 00 | 00 | 01 | 01 |
| 81 | மொறீசியஸ் | 00 | 00 | 01 | 01 |
| 81 | ரோகோ | 00 | 00 | 01 | 01 |
| 81 | வெனிசுலா | 00 | 00 | 01 | 01 |

## உசைன் போல்டிற்கு ஸ்டீவ்வோ பாராட்டு



பீஜிங் ஒலிம்பிக்கில் உலக சாதனைகளுடன் மூன்று தங்கப்பதக்கங்களை வென்ற ஜமெய்க்காவின் குறுந்தூர ஓட்ட வீரர் உசைன் போல்ட்டிற்கு தடகளத்துறையிலிருந்து மட்டுமல்ல, கிரிக்கெட் வீரர்களிடமிருந்தும் பாராட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறுந்தூர ஓட்டத்துறையில் உசைனுக்கு நிகராக வேறொருவரை சுட்டிக்காட்டுவதற்கு முடியவில்லை என்கிறார் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ்வோ.

"உசைன் 100 மீற்றர் இறுதிப்போட்டியில் பங்குபற்றியதை நேரடியாக அரங்கிலிருந்து பார்த்தேன். அக்காட்சியை காணக்கிடைத்தது எனது அதிர்ஷ்டம். நான் கண்ட மிகச் சிறந்த விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்று அது. எமது வாழ்நாளில் காணக்கூடிய ஒரேயொரு சம்பியன் போன்று அவர் விளங்குகிறார்" என ஸ்டீவ்வோ கூறியுள்ளார். ஆரம்ப காலங்களில் கிரிக்கெட் விளையாடிய உசைன் வோல்டின் அபிமான கிரிக்கெட் வீரர் ஆஸ்திரேலியாவின் மத்தியூ ஹைடன் தானாம். "உலகிலேயே எனக்கு மிகவும் பிடித்த கிரிக்கெட் வீரர் மத்தியூ ஹைடன் தான். அவரை ஆஸ்திரேலியாவுக்குச் சென்று சந்திக்கும் வரை காத்திருப்பதற்கு எனக்கு பொறுமையில்லை. வேறு எங்காவது அவரை உடனடியாகச் சந்திக்க விரும்புகிறேன்" என உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

உசைன் தடகளத்துறைக்கு வராமல், கிரிக்கெட்டிலேயே கவனம் செலுத்தியிருந்தால் ஸ்டீவ்வோ, மத்தியூ ஹைடன் ஆகியோரைவிட சிறப்பாக 'ஓட்டம்' குவித்திருப்பாரோ என்னவோ?

## நடுவரை உதைத்த கியூபா வீரருக்குத் தடை




நடுவரை உதைத்த கியூபா வீரர் ஏஞ்சல் வலோடியாவுக்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் டேக்வாண்டோ பிரிவில் வெண்கல பதக்கத்திற்காக கியூபாவின் ஏஞ்சல் வலோடியா மடொஸ், கசகஸ்தான் வீரர் அர்மான் சில்மனோ ஆகியோர் மோதினர்.

இந்த போட்டியின் 2ஆவது கட்டத்தில் குழப்பம் நிலவியது. கியூபா வீரர் 32 என முன்னிலையில் இருந்தபோது, 2 வீரர்களின் பயிற்சியாளர்களும் நடுவரை நோக்கி ஒடி வந்து தங்களுக்கு சாதகமாக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர். ஆனால், நடுவர் கசகஸ்தான் வீரர் வெற்றி பெற்றதாக அறிவித்து போட்டியை நிறுத்தினார். இதனால் ஆவேசமடைந்த கியூபா வீரர் நடுவரை உதைத்தார். இதனையடுத்து கியூபா வீரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது பயிற்சியாளருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் உணர்வை மீறி நடந்ததற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)




## 440 கோடி பேர் கண்டுகளித்த பீஜிங் ஒலிம்பிக்



பீஜிங் ஒலிம்பிக் போட்டியை ஒகஸ்ட் 8 முதல் 17 வரை மட்டுமே சுமார் 440 கோடி பேர் (உலக மக்கள் தொகையில் சுமார் மூன்றில் 2 பங்கு) கண்டுகளித்துள்ளனர்.

இதன்மூலம் அதிகம் பேர் கண்டுகளித்த விளையாட்டுப் போட்டி என்ற பெருமையை இந்த ஒலிம்பிக் போட்டி பெற்றுள்ளது.

நீல்சன் என்ற ஆய்வு நிறுவனம் சீனா, அமெரிக்கா, பிரேசில், தென்ஆபிரிக்கா, இத்தாலி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 38 நாடுகளில் இது குறித்து ஆய்வு மேற்கொண்டது.

பீஜிங் ஒலிம்பிக்கின் நிறைவு நிகழ்ச்சியையும் சேர்த்தால் போட்டியைக் கண்டுகளித்தவர்களின் எண்ணிக்கையில் மேலும் பல புதிய சாதனைகள் நிகழ்த்தப்படும் என நீல்சன் நிறுவனம் தெரிவித்தது.

2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கை 390 கோடி பேர் கண்டு ரசித்தனர். 2000 சிட்னி ஒலிம்பிக்கை 360 கோடி பேர் கண்டு ரசித்தனர்.

## உலக மக்கள் மகிழ்ச்சியை அனுபவிக்க வாய்ப்பளித்தது பீஜிங் ஒலிம்பிக்

ஒற்றுமை உணர்வு, சகோதரத்துவம், அமைதி ஆகியவற்றை வலுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தை ஒலிம்பிக் போட்டி சாதித்துள்ளது என சீன அதிபர் ஜிந்தாவோ குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் போட்டியை ஒட்டி வெளிநாடுகளைச் சேர்ந்த தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோருக்கு மேற்கு பீஜிங்கில் உள்ள டயாவோயுதாஸ் அரசு விருந்தினர் மாளிகை யில் ஞாயிற்றுக்கிழமை மதிய விருந்தளித்தார் ஜிந்தாவோ.

அப்போது அவர் கூறியதாவது:-

ஒலிம்பிக் போட்டியை சிறப்பாக நடத்திக் காட்ட வேண்டும் என்பது [illegible] சீன [illegible] களும் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள், ஆதரவுகள் இந்த வெற்றிக்குக் காரணம். அதன் பெருமை முழுவதும் ஒலிம்பிக் குடும்பத்தையே சேரும்.

தவிர, இப்போட்டி சிறப்பாக முடிந்திட கடினமாக உழைத்த வீரர், வீராங் கனைகள், உலகின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த தன்னார்வத் தொண் டர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் அப்பெருமை சேரும்.

சீன மக்களுடன் இதர நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வழிவகை செய்துள்ளது.

மொத்தத்தில் இப்போட்டி மூலம் உலக மக்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார் - ஜிந்தாவோ.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜக்குவிஸ் ரோஜ், கௌரவத் தலைவர் ஜூவன் ஆண்டனியோ சமராஞ்ச், பல்வேறு மாகாணங்களின் தலைவர்கள், அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோரும் இந்த விருந்தில் கலந்துகொண்டனர். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சாவகச்சேரி – வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன்

# சங்காபிஷேக சிறப்பு மலர்

நாளை (27.08.2008) புதன்கிழமை



*சிவனேயச் செல்வர்களே, அம்மன் அடியார்களே!*

நீர் வளமும் நிலவளமும் செவ்வனே அமைந்த சாவகச்சேரியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்புரியும் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் (14.07.2008) ஆனி மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை நடைபெற்ற கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 45 நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, அதன் பூர்த்திப் பெருவிழா (27.08.2008) ஆவணி 11ஆம் நாள் புதன்கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவுபெற அம்பாள் அருள் பாலித்துள்ளார். சங்காபிஷேகம் சிவஸ்ரீ சதா.மகாலிங்ககுருக்கள் தலைமையில் நடைபெறும்.

**27.08.2008**

காலை 6.30 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பம்.

பிள்ளையார், முருகன், அம்பிகைக்கு எனப் பூசைகள் தொடர்ந்து இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூசையும் இடம்பெறும்.

**27.08.2008**

பிற்பகல் 3.00 மணிக்கு கும்பாபிஷேக மலர் வெளியீடு. மலரின் முதல் பிரதியை டாக்டர் ச.அம்பிகைபாகன் (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி) அவர்களும் கௌரவப் பிரதிகளை கல்விப்பணிப்பாளர்களும், பாடசாலை அதிபர்களும் சிறப்புப் பிரதிகளை வர்த்தகப் பெருமக்களும் பெறவுள்ள னர். அதனைத் தொடர்ந்து போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்கல் இடம்பெறும். அம்மன் அடியவர்கள் அனைவரும் இந் நிகழ்வுகளில் கலந்து அம்மன் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

*திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா,*
*ஆலய ஆதீனகுரு, சிவஸ்ரீ தம்பையாக் குருக்கள் வீரபத்திரக்குருக்கள்.*

## அருள் ஆசிச் செய்தி



தென்மராட்சி சாவகச்சேரி வாரிவனம் பதியில் பல்லாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து தன்னை நாடி வரும் அடியார்களுக்கு திருவருளை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் ஆதி பராசக்தியாம் அன்னை முத்துமாரியம்மனுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் நிகழும் சர்வதாரி வருடம் ஆனித்திங்கள் 30ஆம் நாள் (14.07.2008) அனுஷ நட்சத்திரத்தில் நடைபெற்ற பஞ்சதள இராஜகோபுர மஹாகும்பாபிஷேக நிகழ்வுகளையும் மூல மூர்த்திக்கு நடைபெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளையும் எதிர்கால சந்ததியினருக்கு ஆவணப்படுத்தும் வகையில் இக்கும்பாபிஷேக மலர் வெளிவருவதை அறிந்து மிகவும் மனநிறைவடைகின்றோம்.

இக்கும்பாபிஷேக சிறப்பு மலரானது ஆலயத்தின் பழைய, புதிய தோற்றங்களையும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இராஜகோபுரம், மணிமண்டபம், கருங்கல்லாலான அம்பிகையின் கருவறையின் தோற்றம் ஆகியவற்றுடன் கும்பாபிஷேக பெருச் சாந்தி விழாவின் வெளிப்பாடுகள், பல குருமார்கள், பெரியோர்களின் ஆசிர்செய்திகள், கட்டுரைகள் என்ற பல நல்ல அம்சங்களை தன்னகத்தே கொண்டு ஆலயத் திருப்பணியாளரான வைத்திலிங்கம் சிவராசா அவர்களின் பெரு முயற்சியால் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தம்பையாக்குருக்கள் வீரபத்திரக்குருக்களின் ஆசிர்வாதத்துடனும் கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுகின்றது. இம் மலர் வெளியீட்டினால் நாம் மட்டுமல்ல அனைவரும் மன மகிழ்வடைகின்றோம்.

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். தாயினுடைய அன்பை அனுபவித்து மகிழாத உயிரினங்கள் இப்பூமியில் இல்லை. இந்த வாரிவனம் பதியில் உறையும் முத்துமாரியம்பிகையின் தாய் அன்பையும் திருவருள் கடாச்சத்தையும் சகல ஜீவராசிகளும் பெற்று அனுபவ ரீதியாக மனநிறைவுடன் வாழவேண்டும். நாம் வாழ்கின்ற இலங்கை சைவ திருநாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் இவ்வாலயத்தை சேர்ந்த உலகளாவிய ரீதியில் வாழும் அனைத்து அம்பிகை அடியார்களுக்கும் முத்துமாரி தாயாரின் திருவருள் கடாட்சம் கிடைக்கப்பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ எம்பெருமான் விநாயகரையும் தாயையும் பணிந்து நல்லாசி வழங்கி மகிழ்வுடன் அமைகின்றேன்.

*சிவஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக்கள், சங்காபிஷேக பிரதமகுரு,*
*பிரதமகுரு - நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம்.*

## சாவகச்சேரி - வாரிவனம் அமர்ந்த முத்துமாரி அம்மன் வாரி வழங்கும் அருள் ஒளி



சாவகச்சேரி வாரிவனம் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் முத்துமாரி அம்மன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தற்பொழுது உள்ள மூலஸ்தானத்துக்கு அருகில் உள்ள புளியமரத்தடியில் ஒரு சிறுகுடிசையில் இருந்து மக்களுக்கு அருள்பாலித்ததாக வரலாறு உண்டு. இதற்குச் சான்றாக இவ்வாலயத்தில் இன்றும் காணப்படும் பித்தளைக் குத்துவிளக்கொன்றிலுள்ள 1800 என்ற தமிழ் இலக்கத்தினால் பொறிக்கப்பட்ட குறிப்பினைக் கூறலாம். பின்னர் முத்துமாரி அம்மனின் அருட்கடாட்சம் கிடைக்கப் பெற்றவர்களினால் அம்மனின் துணையுடன் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம் என்பன அமைக்கப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள், பொங்கல்கள், பங்குனி குளிர்த்தித் திங்கள் எனப்பல நிகழ்வுகள் நிகழ்ந்தன.

2000ஆம் ஆண்டு நாட்டுப் பிரச்சினையால் தென்மராட்சி மக்கள் இடம்பெயரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் 2002ஆம் ஆண்டு மக்கள் தென்மராட்சியில் குடியேறிய போது அம்மன் ஆலயம் கர்ப்பக்கிரகம் தவிர ஏனைய மண்டபங்கள் அனைத்தும் சேதமடைந்த நிலையைக் கண்டு மக்கள் அதிர்ச்சியும் மனக் கிலேசமும் அடைந்தனர்.

**சுற்றுமதில் வந்த விதம்**

அம்மன் ஆலயத்தைப் பார்த்த வைத்திலிங்கம் சிவராசா என்பவர் சீர்கெட்டிருந்த ஆலயச் சூழலை ஊர்மக்களை அழைத்து சிரமதானப்பணியினை மேற்கொண்டு நித்திய நைமித்திய பூசைகள் இடம்பெற ஒழுங்குகளை மேற்கொண்டார். அதற்கு சில காலத்தின் பின் அவருக்கு அம்மன் அருள் கிடைக்கப் பெற்றோ? என்னவோ? அம்மனுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று துடித்தவேளை கோயில் தர்மகர்த்தா பரமநாதன் "கோயிலுக்கு சுற்றுமதில் போடு" என்றார். சுற்றுமதில் போடுவதாயின் 1250 அடிக்கு மேல் போடவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டிய பரமநாதன் சிவராசாவிடம் "சிவா நீர் உதை நினைத்துப் பார்க்கமாட்டீர்" என்றார். ஆனாலும் சிவா சுற்றுமதிலுக்கு அம்மன் அருளுடன் 2003 தைப்பூசத்திருநாளில் அடிக்கல் நாட்டினார். மூன்று மாத காலத்துக்குள் அவ்வளவு சுற்றுமதிலும் எட்டு அடிக்கு மேற்பட்ட உயரத்தில் அமைக்கப்பட்டது. இனி அம்மனுக்கு இராஜகோபுரம் அமைக்கவேண்டும் என்றார் சிவா. பரமநாதன் "இது முடியுமா"? தொடங்கினால் முடிக்க வேண்டும்" என்றார். அம்மனிடம் பூக்கட்டி பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்து அம்மனிடம் விடை கேட்டபோது வெள்ளைப்பூ மலர்ந்து அவரின் எண்ணம் வீணாகாது நிறைவேற நல்லருள் புரிந்தார். உடனேயே இராஜகோபுரத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்கு நாள் குறிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஐப்பசி மாத நன்நாளில் அடிக்கல் நாட்டு வைபவம் பரமநாதன் முன்னிலையில் இனிதே இடம்பெற்றது. கோபுர வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பரமநாதன் நோய் வாய்ப்பட்டு காலமானார். கால மான பின் அவருடைய சட்டவாதியினால் பரமநாதனுடைய காணி சிவாவின் பெயருக்கு எழுதப்பட்டது தெரியவந்தது.

**எல்லாம் அம்மன் பார்ப்பா**

இராஜகோபுர வேலைகள் நிறைவேறி வரும்வேளை மீண்டும் சிவாவுக்கு அம்மன் அருள்வாக்காக அடுத்த ஓர் எண்ணம் மனதில் உதயமாகியது. அதாவது அம்மன் உள்வீதி சுற்றி வில்லு மண்டபம் அமைக்க வேண்டும். அதனையும் அம்மன் அருளுடன் தொடர்ந்தார். அந்த வேலையை தொடர்ந்த போதுதான் அவருக்கு அம்மன் சோதனையோ என்னவோ தெரியவில்லை. பணத்தால் அல்ல வேறு வகையில் எத்தனையோ தடங்கல்கள், குழப்பங்கள், போராட்டங்கள் என வந்த வண்ணமே இருந்தன. இவர் இங்கிருந்து கொழும்பு சென்ற நேரம்வேலை செய்து கொண்டிருந்தவர்களும் கூட இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இதனால் வேலையை குறையில் விட்டுவிட்டு வேலையாட்கள் தங்கள் பொருள்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு கோயிலை விட்டு வெளியேறிவிட்டனர். இந்நேரம் அம்மன் அருளாளர் சிவா கொழும்பிலிருந்து யாழ். வந்து வேலைகாரர்களுடன் சென்று வேலையை தொடரச்செய்தார். இதற்காக அவர் பல பிரச்சினைகள், சிக்கல்கள், குழப்பங்களுக்கு முகம் கொடுத்தும் மனம் தளராது எல்லாவற்றையும் அம்மன் பார்த்துக்கொள்வாள் என்று கூறிக்கொண்டே வில்லுமண்டபத்தை அமைத்துவிட்டார். ஆனாலும் மகாமண்டபம் கூரையுடன் தென்படுவது பொறுக்காது அதனையும் வில்லு மண்டபம்போல் அமைக்க நினைத்தார். அதனைத் தொடரவும் பல பேரால் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அம்மனின் கருணையினால் அதனையும் பூர்த்தியாக்கிவிட்டார்.

**கருங்கல்லில் மூலஸ்தானம்**

உண்மையில் அம்மன் அருள் என்றுதான் சொல்ல வேண்டும். இத்தனையும் அதாவது சுற்றுமதில் பஞ்சதள இராஜகோபுரம். இராஜகோபுரத்தோடு போட்டி போட்டது போல் இருமருங்கிலும் மணிக்கூட்டு கோபுரம் மற்றும் வில்லுமண்டபம் அதுமட்டுமா! சுற்று பிரகாரத்தில் பிள்ளையார், முருகன் வசந்தமண்டபம் கேதாரகௌரீஸ்வரி என்று எல்லா பரிவார மூர்த்தங்கள் அமைந்த பின் அம்பாள் மூலஸ்தானம் கருங்கல்லினால் அமைக்க அருளாளர் அவாக்கொண்டு அம்மனிடம் விடைபெறும்பொருட்டு பூகட்டி பார்த்தபோது அம்மன் அருள் பாலித்துவிட்டார். அருளாளர் கொழும்பிலிருந்து ஒருபகுதி கருங்கற்களைக் கோயிலுக்கு அனுப்பிவைத்தார். எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்து அத்தனை பாரிய கருங்கற்களையும் கடல் வழியாக கொண்டு வந்து இரவு பகல் வேலையென வேலைகள் செய்து கட்டட சிற்பந்திகளின் முயற்சியால் வேலை பூரணமடைந்துவிட்டது.

இப்படி பல சோதனைகளில் மூழ்கி வேதனையில் நனைந்தாலும் அருளாளர் எண்ணியவை எல்லாம் அம்மனின் அருளால்தான் நிறைவேறியிருக்கவேண்டும். இவையெல்லாம் அம்மனின் புதுமைதான். அம்மன் தனது அன்பர்களில் அடியவர்களில் ஒருவராகிய அருளாளர் வைத்திலிங்கம் சிவராசா என்பவருக்கு, தனது சக்தியை அள்ளிக்கொடுத்து பண்டைய சோழர்கால ஆலயமென போற்றும் வகையில் இவ்வூரின் கண் அன்னை அருளாட்சி நடைபெறுகின்றது. இப்பொழுது சாவகச்சேரி, வாரிவனம் பதியிலே பஞ்சதள இராஜகோபுரத்துடன் முத்துமாரி அம்மன் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றாள். அத்துடன் அம்மன் அருளுடன் வெளிவீதியில் காளிஅம்மன் ஆலயமும் அமைக்கப் பட்டுள்ளது.

**1008 சங்காபிஷேகம்**

இங்கு முத்துமாரி அம்மன் எனக் கோயில் கொண்டு ஆதி பராசக்தியாக, அன்னை பராசக்தியாக, முத்துமாரித் தாயாக, இருந்து வாரிவனம் பதியிலே வாரிவாரி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இவ்வாலய மகா கும்பாபிஷேகம் (14.07.2008) ஆனி 30ஆம் நாள் திங்கட்கிழமை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 45ஆம் நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்று அதன் பூர்த்திப் பெருவிழா (27.08.2008) ஆவணி 11ஆம் நாள் புதன்கிழமை 1008 சங்காபிஷேமும், நூல்வெளியீடும் சமய அறிவுப்போட்டியில் கலந்து பரிசு பெறும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் இனிதே நிறைவேற அம்மனின் திருவருள் அனைத்து அடியார்களுக்கும் கிடைக்கப்பெற்று இன்புற்றிருக்கவேண்டும் என அன்னை முத்துமாரித் தாயைப் பிரார்த்திக்கின்றேன்.

*முத்துமாரி அம்மன் தொண்டர்*
*திருமதி நாகேஸ்வரி தம்பையா (திரவியம்).*

**குறிப்பு:**
***பரிசில் பெறும் மாணவர்கள் கவனத்திற்கு:***
மேற்படி (27.08.2008 நடைபெறும் சங்காபிஷேகத்தில்) பரிசில் பெறும் மாணவர்கள், பெற்றோர்கள் பங்குபெறுவதுடன் காலை 8.30 மணிக்கு தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**சங்காபிஷேக விழா சிறப்புற வாழ்த்துவோர்:**

**சிவா ரேடிங் கம்பனி**
89, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13
T.P.: 0112 470639 Fax:0112 399050

**ஸ்ரீமுத்துமாரி அம்பாள் டிரேடர்ஸ்**
342, 344, 346, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
T.P.: 021 222 8666

**No.1 ஒயில் ஸ்ரோர்ஸ்**
இல.1, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112 458430, 458431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிய அளவையியல் கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலும் பயில்வதற்கு வாய்ப்பு

யாழ்.மாணவர்களுக்கான கணிய அளவையியல் கற்கை நெறியை ஐ.ஐ.எஸ். நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அடுத்தமாதம் ஆரம்பிக்கவிருக்கிறது.

கட்டுமானத்துறையில்வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய இந்தக் கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஆரம்பிப்பது குறித்து அந்த நிறுவனம் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்றைய நவீன உலகிலும் சரி, இலங்கையிலும் சரி கட்டட நிர்மாணத்துறை மிக வேகமாக வளர்ச்சி கண்டுவரும் தொழில் துறையாகவுள்ளது. புதிய தொழில்நுட்பங்களும் புதிய துறைசார் அறிவும் அதன் வெற்றியின் வளர்ச்சிக்குக் காரணங்களாகவுள்ளன.

அதிக வருமானமும் உள நிறைவும் தரும் உயர் தரத்தினை தொழில் வாய்ப்புக்களை நாடுவோர்க்கு வேறெந்தத் துறையையும் விட கட்டுமானத்துறையே அதிக

## அடுத்த மாதத்தில் ஐ.ஐ:எஸ் ஆரம்பிக்கிறது

வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. கட்டுமானத்துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் இன்று முன்னணி வாய்ப்புக்களைத் தருவது கணிய அளவையியல் (Quantity Surveying) துறையாகும்.

கணிய அளவையியலில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள விரும்பின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்திலேயே மேற்கொள்ள முடியும். ஆயிரக்கணக்கில் துறைசார் வல்லுநர்கள் தேவையாகியுள்ள இத்துறைக்கு சில நூற்றுக் கணக்கிலேயே மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். இந்நிலையில் அனுமதி கிடைக்கத் தவறும் மாணவர்கள் கொழும்பு போன்ற பிரதேசங்களுக்குச் சென்று தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் மேற்படி கற்கை நெறியைத் தொடர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எமது பிரதேச மக்களை பொறுத்த வரையில் இது பாரிய பிரச்சினையாவுள்ளது.

இவ்வாறான நிலையில் எமது சொந்த மண்ணிலேயே Quantity Surveying கற்கை நெறியைத் தொடர்வதற்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது IIS City Campus நிறுவனம்.

British Higher National in Quantity Surveying கற்கைநெறியானது பிரித்தானியாவின் ஆளுநர் சபையின் (Edexcel International, UK) உயர்தராதரச் சான்றிதழுடன் இலங்கை கணிய அளவையியல் நிறுவனத்தின் (Sri Lanka Institute of Quantity Surveys) அங்கீகாரத்துடன் கொழும்பிலுள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனமாகிய ICBT Campus இன் அனுசரணையுடன் IIS City Campus இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி கற்கைநெறி இரண்டு காலப் பகுதியை உள்ளடக்கியுள்ளது. இக்கற்கை நெறியைப்பூர்த்திசெய்து கொள்ளும் மாணவர்கள் B.Sc.(Hons) எனும் பட்டக்கல்விக்கான இறுதியாண்டு கல்வியை பிரித்தானியாவின் 6 நட்சத்திரப் பல்கலைக்கழகமாகிய Salford பல்கலைக்கழகத்திலோ அல்லது 150 க்கு மேற்பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ தொடர முடியும். இதன் மூலமாக RICS (Royal Institution of Chartered Surveyors UK) தராதரத்தினைப் பெற்றுக்கொள்வது ஓர் இலகுவான வழி என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அது மட்டுமன்றி இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் Quantity surveying, Cost Management, Project management ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது மேற்படிப்பினைத் தொடரவோ முடியும்.

இக்கற்கைநெறியானது IIS City campus இனால் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நிறுவனத்தின் இம்முயற்சியானது யாழ்.குடாநாட்டு மாணவ சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று எண்ணுகின்றோம். இவ்வரிய சந்தர்ப்பத்தினை மாணவர்கள் பயன்படுத்திப் பலனடைவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை - என்றுள்ளது. (1)

விளம்பர விவரணம்



எச்.என்.பி. அசுரன்சினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்கான விற்பனை மேம்படுத்தும் போட்டியில் யாழ்.பிராந்தியத்திலிருந்து 6 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் சிங்கப்பூர், மலேசியா, பாங்கொங் நாடுகளுக்கு சுற்றுலா செல்லவுள்ளனர்.

வெற்றியீட்டிய உதவி வெளிக்கள முகாமையாளர்களான எம்.மகேந்திரராஜ், ஆர்.தயாகரன், வெளிக்கள முகாமையாளர் பி.அலன்கியூமர், ஆலோசகர் ரி.கதீசன், அணித்தலைவர் ஜி.பிரதீபன், ஆலோசகர் ரி.மோகன்ராஜ் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# யாழ்.ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் கோதுமை மா போதியளவு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடைகளில் கோதுமை மா எவ்வித கட்டுப்பாடுமின்றி நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகிறது.

கிலோ 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

பங்கீட்டு அட்டைக்கு பத்து கிலோவுக்கு மேற்படாமல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் சீனி கிலோ 70 ரூபா 50 சதத்திற்கு பங்கீட்டு அட்டைக்கு அரை கிலோ வீதம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சீனியின் கையிருப்பு முடிவுற்றதனாலேயே இவ்வாறு குறைந்தளவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனி போதியளவு சங்கத்திற்கு வந்து சேரும் பட்சத்தில் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(202-224)


இந்தியாவில் படியுங்கள்
பிரிந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது
B.Sc - மரபியல் / உயிரியல் / நுண்உயிரியல் / கணனி விஞ்ஞானம்
B.B.M - வர்த்தக முகாமைத்துவம்
B.C.A - கணனி பிரயோகம்
B.Com - தொடர்பாடல் வர்த்தகம் + கணனி
பிரிந்தாவன் பொறி இயல் கல்லூரி
விஸ்வேஸ்வரையா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்தது
B.E * தகவல் விஞ்ஞானம் + பொறியியல்
* இலத்திரனியல் + தொடர்பாடல் பொறியியல்
* கணனி விஞ்ஞானம் + பொறியியல்
* சிவில் பொறியியல்.
Company Secretarial Services (Pvt) Ltd.
Tel: 0777-317043



வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250


## முதியோர் தின விழாவுக்கு ஏற்பாடு

நவாலி,ஓக.26

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முதி யோர் தின விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

இது சம்பந்தமான கூட்டம் எதிர் வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரதேசசெயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு விழாக்குழு தலைவர், செயலாளர் மற்றும்அனை வரையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-100)

## குருநகரில் மின்குமிழ் ஒளிரவில்லை

குருநகர்,ஓக.26

குருநகர் தண்ணீர் தாங்கியின் முன்பாக உள்ள மின்கம்பத்தில் உள்ள மின்குமிழ் கடந்த பல மாதங்களாக ஒளிராமல் உள்ளது. இதனால் இவ்வீதியூடாக பயணிப்போர் இரவு நேரங்களில் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இடம் ஒரு முச்சந்தியாகவும் ஒடுக்கமான இடமாகவும் உள்ளதனாலும் இப்பகுதி சன நெருக்கடியுள்ளபகுதியாகவும் உள்ளதனாலும் மின்சாரசபையினர் உடன் நட [illegible] வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர். (202-51)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 . 03 . 1931 |  | 28 . 07 . 2008 |

## அமரர் குழந்தைவேலு நடராஜன்

28.07.2008 இல் எமது குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடனே சமுகம் தந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாகவும் தமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (26.08.2008) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், நாளை (27.08.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீட்டுக் கிருத்திய கிரியைகள் அவரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விற்குத் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (77436) குடும்பத்தினர்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி தர்மராசா இலட்சுமிதேவி

மலர்வு 23.04.1947 — உதிர்வு 13.07.2008

நாங்கள் உங்கள் நிழலினிலே
நலமோடு வாழ்ந்திருக்க
நாதியின்றி எமை எல்லாம்
நானிலத்தில் தவிக்கவிட்டு
நீங்கள் சென்ற இடமெதுவோ
நமக்கு ஒருதரம் சொல்வீர்களோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம். (77428) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கான வலுவூட்டல் வளாகம்

விஷேட தேவைக்குரிய பிள்ளைகளுக்கு கற்றல் செயற்பாடுகளை வழங்குவதற்காக வலுவூட்டல் வளாகம் ஒன்றை சீட்(SEED) நிறுவனம் நடத்தி வருகின்றது. வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகத்தில் 18 வயதுக்கு குறைந்த கேட்டல், பேச்சு சிரமமுடைய மாணவர்கள் கற்று வருகின்றனர். வவுனியாவிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள தேக்கவத்தை என்ற கிராமத்தில் இந்த வலுவூட்டல் வளாகம் அமைந்துள்ளது.

8 ஆண்டுகளுக்கு முன்னர், முன்னாள் வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் நடத்தப்பட்ட விஷேட தேவையுடையவர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டோரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வளாகம் அமைக்கப்பட்டது. தற்போது இங்கு 59 மாணவர்கள் கற்கின்றனர். சீட் நிறுவனம் 24 ஆசிரியர்களுக்கு விஷேட தேவை குறித்த அடிப்படைப் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

வலுவூட்டல் வளாகத்தின் அணிப் பொறுப்பாளர் திருமதி கிருஷ்ணதேவி சுரேஷ் இங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் கற்பித்தல் செயற்பாடுகள் குறித்து கருத்து வெளியிடும்போது இந்த வலுவூட்டல் வளாகத்தில் இரண்டு பிரிவாக கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார். ஒன்று கேட்டல், பேச்சு சிரமமுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் மற்றையது கற்றலில் சிரமமுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வலுவூட்டல் வளாகத்தில் பயிற்சி பெற்று அங்கேயே தற்போது ஆசிரியையாக பணியாற்றி வரும் ஜெஸ்ரின் மேரி சந்திரகுமார் பயிற்சியின் போது விஷேட தேவையுடைய குழந்தைகளுக்கு கற்பித்தல் நடவடிக்கையினை எவ்வாறு திட்டமிட்டு மேற்கொள்வது, உபகரணங்களை எவ்வாறு உபயோகப்படுத்துவது, வகுப்பறையை எவ்வாறு பராமரிப்பது போன்ற பயிற்சிகளை தாம் பெற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் எதுவுமே தெரியாமல் இங்கு வந்து இணைந்து கொண்ட பிள்ளைகள் தற்போது தங்களுடைய வேலைகளைத் தாங்களாகவே மேற்கொண்டு வருவதைக் காணும்போது மகிழ்ச்சியாக உள்ளது. இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது பணியினை ஒரு வரப்பிரசாதமாகக் கருதி சேவைமனப்பான்மையுடன் செயலாற்றுவது இங்குள்ள குழந்தைகளுக்கு கடவுள் வழங்கிய வரமாகவே எண்ணத் தோன்றுகின்றது.

இவ் வளாகத்தில் கற்றுவரும் கணேஸ்ரூபன் என்ற மாணவனின் தாய் சற்குணவதி, முன்னர் தனது மகன் வீட்டிலேயே முடங்கிக் கிடந்ததாகவும் தற்பொழுது அவர் மற்ற மாணவர்களுடன் இணைந்து வெளியில் செல்வதையும் மகிழ்சியாக விளையாடுவதையும் பார்க்கும்போது தனக்கு மட்டற்ற மகிழ்ச்சி கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள், உணவு என்பன வழங்கப்படுகின்றன. வவுனியா மாவட்டத்தில் நடைபெற்று வரும் விளையாட்டுப்போட்டிகளில் இம்மாணவர்கள் கலந்துகொள்வதும் அனேக மாணவர்கள் பரிசில்களைப் பெற்றிருப்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம்.


இதேவேளை வவுனியா தாலிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையுடன் இணைந்து சீட் (SEED) நிறுவனம் விசேட தேவைக்குரிய பிள்ளைகளுக்கான பிரிவு ஒன்றையும் ஆரம்பித்துள்ளது. 2006 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவில் தற்போது 20 மாணவர்கள்கற்று வருகின்றனர்.

விசேட தேவைக்குரிய பிள்ளைகள் உங்கள் குடும்பத்திலும் இருப்பார்களானால் அவர்களை வீட்டிற்குள்ளேயே முடக்கி விடாதீர்கள். அவர்களும் இந்த பரந்து விரிந்த உலகத்தைக் காண அனுமதியுங்கள்!

(நன்றி: மீண்டும் வாழ்வோம். Inter News)



சுழிபுரம் காலையடி ஞான வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆறுமுக சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (119)



வண்.வடமேற்கு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படம்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.26

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தில் நடத்திவரும் தெய்வீக இசை அரங்கில் இன்று எஸ்.திஸநாயகம் போல் இசைக் கச்சேரி நிகழ்த்துவார்.

கே.குகபரன் - வயலின், எஸ் துரைராசா - மிருதங்கம், சதாவேல் மாறன் - கடம், என்.சதீஸ்குமார் - முகர்சிங்.

* * *

யாழ்ப்பாணம், ஓக.26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந் திருவிழாக் காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை 'ஆலயம் தானும் அரண் எனத் தொழுமே' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

தெல்லிப்பளை ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, கோண்டாவில் நெட்டிலிப்பாய் கணேசா அறநெறிப் பாடசாலை, நிற்சாமம் ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா கந்தபுராணம் தொடர் செற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

இதில் இன்று 'வீரவாகு தேவர் தூது' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (203)




## நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



நேசத் தாலரன் நீள்கழல் போற்றுவார்
பாசத் தாற்றுயர் பாரினி லெய்திடார்
வாசக் காபல சேரு மிலங்கையித்
தேசத் தான் சொல்லைச் சிந்தனையிற் கொண்மினே
- யோகர் சுவாமிகள்.

### காத்தருள வேண்டும் ஐயா!

நல்லூரின் நாயகனே கந்தனே - எமக்கு
நல்லருள் தந்து காத்தருள வேண்டும் ஐயா
அடியவர்களை அரவணைக்கும் அழகனே - எமக்கு
அன்பு காட்டிட வேண்டும் ஐயா!

கையினிலே வேல் கொண்டு எம்மை
கருணையுடன் காத்தருள வேண்டும் ஐயா
மயில்மேல் திருவீதி உலாவந்து எமக்கு
திருவுள்ளம் கொண்டு அருள்வாய்!

அலங்காரக் கந்தன் என்று போற்றும் எமக்கு
அழகுடனே வந்து அருள் பாலிப்பாய் ஐயா
வெற்றிவேல் கொண்டு வந்து எம்மின
வெவ்வினைகள் அழித்துக் காப்பாய் ஐயா!

ஜெ.தர்மிளா

### வேலெடுத்து வரவேண்டும்

நல்லையெம்பதியினில் நலமுற உறையும் திருமுருகா!
அடியவர்க்கு அபயமளித்து அருள் புரியும் ஆறுமுகா!
வேலெடுத்து வரவேண்டும் மறுபடியும் ஒருதடவை
அவலங்களைப் போக்கிடவே அடியவரைக் காத்திடவே
வேலெடுத்து வரவேண்டும், வேண்டும் வரம் தரவேண்டும்

த.சிவவதனி

### ஓடி வந்து அருள்வாய்

பிரணவ மந்திரத்தை ஒருதரம் சொன்னால்
பாவங்கள் எல்லாம் பறந்தோடுதையா
அரவமணிந்த ஈசன் அருட்திறத்தால்
அவதரித்த ஆறுமுகக் கந்தா!

சூரரைக் காத்து அசுரரை வதம் செய்தநின்
சிறப்பை நினைத்தாலே சுகந்தானப்பா
நரகங்கள் மலிந்த இப் பூவுலகில் ஒளியேற்ற
நாட்டமுடன் ஓடிவந்து அருள்வாய் வேலா.

உதிஷ்டிரன் (நல்லூர்)

### நல்லூர் கந்தா எனக்கொரு கதை சொல்லு

கந்தா எனக்கொரு கதை சொல்லு
கவலை நீக்கிடும் வழி சொல்லு
செந்தா மரையாள் மருமகனே
சிவபூரணி தரு குருகுகனே

சரவண பவனென பாடிவந்தேன்
தாளிணை மலரை தேடிவந்தேன்
மருமலர் மாலை சூடவந்தேன்
வருமடி யாரொடு கூடவந்தேன்

க.லோகேஸ்வரன்

### புள்ளிமயில் மீது துள்ளிவரும் நல்லை முருகா

புள்ளி மயில் மீது சக்தி துணையோடு
தெள்ளு தமிழ் பாட துள்ளி வரும் முருகா
அள்ளி அருள் சுரந்து அசுரவதம் செய்ய
ஆறுமுகங்களுடன் அவதரித்த முருகா!
வள்ளி தெய்வானையுடன் சேவற்கொடி சூழ
தேவர்தமை சிறை மீட்ட முருகா!
பள்ளிதனில் படிக்கின்ற பாலர் படும் துயரதனை
பாரா முகமாக இருப்பதேனோ

வே.பி.சண்முகநாதன் (வேலணை).

### இன்னல்களை நீக்கிவிடு முருகா

நல்லையம்பதியில் அமர்ந்து
மக்கள் துயர் துடைக்கும்
மா முருகனே
நல்லையம்பதி வேலவனே!
பக்தியுடன் வரும்
பக்தர்கள் துயர்
தீர்த்தருள் பாலிக்கும்
கந்தனே கடம்பனே!

எடுத்த காரியம்
சிறப்பாக அமைய
எம் சிரத்தையில் இருந்து
அருள்புரியும் சுப்பிரமணியனே!
இன்னல்கள் ஒழிந்து வறுமை நீங்க
இந்நாடு வளம்பெற
உன் திருவடிகளை பணிந்து
வேண்டுகின்றேன் முருகா!

ச.சுபா (மானிப்பாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 18 வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையிலும் சிறப்பாக இயங்கிவரும் பொன்.பரமானந்தா வித்தியாலயம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியுடன் இணைந்து கடந்த 18 வருடங்களாக இயங்கியமையினால்தான் குரும்பசிட்டி பொன்பரமானந்தா வித்தியாலயம் இன்று வெற்றிகரமான முறையில் தனது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றது.




1900 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப் பாடசாலை 1990 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெயர்ந்து இன்றுவரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியுடன் இணைந்து இயங்கிவருகின்றது.

108 ஆண்டில் இன்று கால்பதித்திருக்கின்றது.

இப் பாடசாலையின் தற்போதைய அதிபர் சோமசுந்தரம் ராமநாதனுடன் உரையாடியபோது அவர் தெரிவித்ததாவது:

இடப்பெயர்வுக்கு முன்னர் இப் பாடசாலை தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு சுமார் 650க்கு மேற்பட்ட மாணவர்களுடனும் 23 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் இயங்கிவந்தது.

ஆரம்பப் பிரிவுப் பாடசாலையாக உள்ளபோதும் தற்போது ஆரம்பப்பிரிவு இயங்குவதில்லை. இணைந்து இயங்கும் பாடசாலையில் ஆரம்பப்பிரிவு இல்லாமையால் 90 ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து ஆரம்பப் பிரிவு இல்லாமல் இடைநிலை வகுப்புகளுடனேயே இயங்கி வருகின்றது.

தற்போது தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகள் இடம்பெறுவதுடன் 18 மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் காணப்படுகிறார்கள்.

90 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம் பெயர்வைத் தொடர்ந்து தெல் லிப்பழை யூனியன் கல்லூரி மருதனார்மடத்தில் அமைந் துள்ள இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இயங்கத் தொடங் கிய காலம் முதல் இன்று வரை யூனியன் கல்லூரியுடன் இணைந்தே இயங்கி வருகின்றது.

கடந்த ஆண்டு ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குமோணவர்கள் தோற்றி அனைவரும் சித்தியடைந்துள்ளார்கள். கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுடன் இவர்கள் யூனியன் கல்லூரியில் உயர்தரத்தில் கற்கின்றார்கள்.

## யூனியன் கல்லூரியுடன் சேர்ந்து இயங்குவதனால் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுகின்றன

இந்த ஆண்டு தரம் 6 இல் 5 பேரும் ஜீ.சி. ஈ.சாதாரணதர வகுப்பில் ஒருவரும் ஏனைய மாணவர்கள் ஏனைய வகுப்புக்களிலும் காணப்படுகின்றார்கள். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளங்களின் பயன்பாடே மாணவர்களுக்கு கைகொடுத்து வருகின்றது.

வகுப்பறைகள், ஆசிரியர்கள் என அனைத்திலும் யூனியன் கல்லூரியின் வளமே பொன்.பரமானந்தா வித்தியாலயத்துக்கு கிடைக்கின்றது. உலக உணவுத் திட்டம் கூட யூனியன் கல்லூரியுடன் இணைந்தே செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றார் அதிபர்.

மாணவர்கள் வகுப்புரீதியாக குறைவாகக் காணப்படுவதனால் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் தமிழ், ஆங்கிலதினப் போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் பாடசாலை தனது நூற்றாண்டை நிறைவுசெய்துள்ளது. அதனையிட்டு பழைய மாணவர்களினால் ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாடசாலையுடன் இணைந்து இயங்கி வருகின்றது. இடம்பெயர்வதற்கு முன்னர் பழைய மாணவர் சங்கம் சிறந்த முறையில் இயங்கியது. எனினும் கடந்த சில வருடங்களாக பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் நடைபெறுவதில்லை.

இடப்பெயர்வைத் தொடர்ந்து இப் பாடசாலையின் அதிபர்களாக கடந்த 18 வருடகாலத்தில் தளையசிங்கம், சிவதாசன், செல்வரத்தினம் மற்றும் ராமநாதன் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள்.



உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இப் பாடசாலை தனது சொந்த இடத்திற்கு செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. உயர்நீதிமன்றம் அண்மையில் வெளியிட்ட தீர்ப்பின் பிரகாரம் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டால் இப் பாடசாலையும் தனது சொந்த இடத்திற்கு மீளக் கொண்டு செல்லப்படலாம் என மாணவனின் பெற்றோர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

**பவித்திரன்**

# பாடசாலைகளில் பதிவானவை... பாடசாலைகளில் பதிவானவை



காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆசிரியர், மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. யாழ்.தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எஸ்.அருளானந்தம் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்கிப் பாராட்டுவதைப் படத்தில் காணலாம். (250)



தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலையத்தில் அண்மையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவின்போது பாடசாலை மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வைப் படத்தில் காணலாம் (50-119)



வட்டு இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற தரம் 4, 5 வகுப்புகளுக்கான அழகியற் பாட "மலரும் சந்தங்கள்" என்ற இறுவட்டு வெளியீட்டு விழாவில் முதற் பிரதியை வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பு.விக்னேஸ்வரன் வெளியிட்டுவைக்க வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் திருமதி.ஜெ.அருள்மயம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம் இறுவட்டை வெளியிட்ட ஆசிரியை திருமதி மலர்விழி கனகசபையும் படத்தின் மத்தியில் காணப்படுகின்றார்



மக்கள் வங்கியின் 47 ஆவது வருட நிறைவையொட்டி ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் மக்கள் வங்கியின் மாணவ மறுமலர்ச்சி அலகு திறந்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வித்தியாலய அதிபர் எம் செல்வஸ்தான் குத்துவிளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ரீ.கே.ஆனந்தராஜா மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் வங்கி ஊழியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.



ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் கட்டாயக் முள்ளிக் கிராம மக்களை நேரில் சந்தித்து கட்டாயக் கல்வி அறிவுறுத்தினர்.

இந்த அறிவுறுத்தல் நிகழ்வில் பாடசாலை அதிபர் சி.சுந்தரன் உரையாற்றுவதை படத்தில் காணலாம்



நவாலி மகாவித்தியாலயம் ஜீ.சீ.ஈ.உயர்தரக் கலைப்பிரிவு (சி) பாடசாலையாக தரம் [illegible]. இந் நிகழ்வில் முதற் தொகுதிக் கலைப்பிரிவு மாணவர்களை ஆசிர்வதிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வலிகாமம் வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தலுக்கு சவால் விடும் அரசு அதற்கு முன் அரசமைப்புக் கவுன்ஸிலை ஏற்படுத்தத் தயாரா?

தமிழர் தாயகம் மீது தாம் தொடுத்திருக்கும் யுத்தத் தீவிரப் போக்கு, பெரும் வெற்றிகரமான பெறுபேறுக ளைத் தமக்குத் தந்து வருகின்றது எனத் திருப்திப் படும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு, மேலும் நல்ல ஊக்க மருந்தாக வந்து அமைந்திருக்கின்றது வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபை களுக்கான தேர்தல் முடிவுகள்.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவை குற்றம் சுமத்துவது போல, நடந்து முடிந்த இத் தேர்தல்களில் அராஜகங்களும், அட்டூழியங்களும், குளறுபடிகளும், அதிகாரத்துஷ் பிரயோகங்களும் அளவுக்கு மீறி இடம்பெற்றன என்று வைத்துக் கொண்டாலும் கூட -

இத் தேர்தல் முடிவுகள், தமிழர் தாயகம் மீது இந்த அரசு தொடுத்திருக்கும் தீவிர யுத்தநடவடிக்கைகளுக்குக் கிடைத்த தென்னிலங்கை மக்களின் அங்கீ காரம் என்று கூறுவது தவறல்ல.

பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் பேரினவாதப் போக்கையும் -

அதன் விளைவான - தமிழர் தாயகம் மீது தென்னிலங்கைச் சிங்களத்தின் மேலாண்மையை உறுதிப்படுத்தும் கொடூர யுத்த நடவடிக்கைகளையும் -

பின்பற்றி, செயற்படுத்துவதன் மூலம் தென்னிலங்கை மக்களின் ஆதரவையும், வாக்குகளையும் இலகுவாகச் சுருட்டிவிடலாம் என்று கருதும் அரசு, அதன்வழி தனது காய்கள் அனைத்தையுமே நகர்த்திச் செல்கின்றது.

போர் வெற்றிகளைப் பிரகடனப்படுத்திப் பொதுத் தேர்தல்களில் வென்று விடலாம் என்ற நம்பிக்கை கடந்த சனியன்று நடந்த மாகாணசபைகளுக்கான வாக்களிப்பின் முடிவுகளை அடுத்து அரசுத் தலைமைக்கு நன்கு ஏற்பட்டு விட்டது.

போர்வெற்றியை முன்னிறுத்தி பொதுத்தேர்தலில் வெல்லலாம் என்ற மிதப்பில், இப்போது பொதுத் தேர்தல் குறித்து வீம்பாகப் பேசத் தொடங்கியிருக் கின்றார்கள் அரசுத் தலைவர்கள்.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் சவால் விடுத்தால் அடுத்த மூன்று மாதங்களில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் அரசு தயார் என்று அரசுத் தலைவர்கள் பதில் சவால் விடுமளவுக்கு நிலைமை சென்றிருக்கின்றது.

ஆனால், அரசுத் தரப்பின் இந்தத் தேர்தல் அறை கூவலும், சவாலும், அரசுத் தரப்பிலேயே சில முக்கியஸ் தர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருப்பதும் இப்போது நோக்கத்தக்கதே.

ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றிலிருந்து அரசுப் பக்கம் தாவி அமைச்சர் பதவிகளை ஏற்ற வர்களுக்கே - முன் கூட்டியே பொதுத்தேர்தல் நடத் தலாம் என்ற - இந்தத் திட்ட அறிவிப்பு வயிற்றைக் கலக்குவதாக வந்து அமைந்திருக்கிறது.

தாய்க் கட்சிகளை விட்டுப் பிரிந்து அரசுத் தரப்பிலோ, அரசுத் தரப்புக் கட்சி ஒன்றிலோ இணைந்திருந் தாலும் - அல்லது தனிக்குழுவாக இயங்கினாலும் - இன்று திடீர்ப் பொதுத் தேர்தல் நடக்குமானால் தமக்கு அரசுப் பக்கத்திலும் முக்கியத்துவம் கிடைக்காது, தாய்க் கட்சியும் இடமளிக்காது என்பது அவர்களுக் குத் தெரியும். பொதுத் தேர்தல் ஒன்று திடீரென வரு மானால் தங்கள் கதி நட்டாற்றில் விட்ட மாதிரி ஆகி விடும் என்பதுதான் அவர்களது கவலை.

கட்சி மாறி, அணி தாவி வந்த தங்களை அரசுத் தரப் பின் கட்சி ஆதரவாளர்களும் ஆதரிக்கப் போவதில்லை; தங்களது மூலக் கட்சியின் ஆதரவாளர்களும் ஏற்கப் போவதில்லை என்பதால் திடீர்த் தேர்தல் ஒன்றைச் சந்திக்க நேர்ந்தால் தங்களின் எம்.பி. பதவி அதனுடன் 'அவுட்' என்ற கவலை அவர்களில் பெரும்பாலானோருக்கு.

ஆறாண்டுகளுமே முழுவதுமாக எம்.பி. பதவியுடன் அமைச்சர் பதவியையும் சேர்ந்து அனுபவிக்கலாம் என்ற நப்பாசையில் அரசுப் பக்கம் தாவினால், இப் போது அரசுத் தலைமையோ நேரத்துடன் - முன்கூட் டியே - அடுத்த பொதுத் தேர்தலை நடத்தி, நேரகாலத்துடனேயே தங்களை வீட்டுக்கு அனுப்ப வழி செய் கின்றதே என்ற ஆதங்கமும் கவலையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், அரசுடனும் அரசுப் படைகளுடனும் சேர்ந்தியங்கும் தமிழ் ஒட்டுக்குழுக்களுக்கும் துணைப் படைகளுக்கும் திடீர்ப் பொதுத்தேர்தல் என்ற பேச்சு வாயில் சர்க்கரை போட்ட மாதிரி தித்திப்பை ஏற்படுத்தியிருப்பதையும் மறுக்க முடியாது.

தமிழர் தாயகத்தில் அரச பயங்கரவாதம் கட்ட விழும் இந்தக் கொடூரமான சமயத்தில் தமிழ்த் தேசிய எழுச்சிச் சக்திகளின் குரல் வளையை அந்த அரச பயங்கரவாதக் கொடூரம் மூலம் நசுக்கி, இல்லாதொழித்துக் கொண்டு, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பதவியைத் தாங்கள் பிடுங்கிக் கொள்ளலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர் ஒட்டுக்குழுக்களின் தலை வர்கள்.

இப்படி அதிகாரத் தரப்பில் பொதுத் தேர்தல் குறித்து ஆரவார எடுப்புகள் வெளிப்பட்டாலும் -

பொதுத் தேர்தல் குறித்து எதிர்க்கட்சிகளுக்கு அரசுத் தலைமை சவால் விட்டாலும் கூட -

அத்தகைய சவால் விடுகையும், போட்டியும் நியாயம், நீதி யாக இருக்கவேண்டும் என்பதே முக்கியமா னதாகும்.

இலங்கையில் நல்லாட்சி, நீதி, நியாயமான தேர்தல் ஆகியன உரிய நெறிமுறையில் நிலைநாட்டப்படல், வெளிப்படையான பொருளாதார நிர்வாக முறையும் கொள்கையும் பின்பற்றப்படல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் சேர்ந்து அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தன.

அந்தத் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டிய அரசமைப்புக் கவுன்ஸிலை உருவாக்காமல் இழுத்தடிப்பதன் மூலம் இந்த நல்ல காரியங்கள் இடம்பெறாமல் முட்டுக்கட்டை போட்டு வருகின்றார் ஜனாதிபதி.

போர் வெற்றிகளை வைத்துத் தேர்தல் நேரத்தில் வெல்லலாம் என்று கனவு காணும் அரசுத் தரப்பு, முதலில் தேர்தல்களை நியாயமாக - நீதியாக - நெறிமுறையாக - நடத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

அதைச் செய்துகொண்டு, பொதுத் தேர்தல் சவாலை அரசுத் தலைவர் விடுப்பாரானால் அதில் நீதி, நியாயம் இருக்கும்.

அதற்கு அரசும் அதன் தலைவரும் தயாரா?

# உணவு, மருந்துப் பொருள்களுக்குப் பாரிய தட்டுப்பாடு வன்னியில் மனிதாபிமான நிலை மோசமடைகிறது

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

அத்தியாவசிய உணவு, எரிபொருள்கள் மற்றும்மருந்துப் பொருள்களுக்கு நிலவிவரும் பாரிய தட்டுப்பாடு காரணமாக வன்னியில் மனிதாபிமான நிலை தொடர்ந்தும் மோசமடைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 2 லட்சத்து 17 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகில் சுகாதாரம் தொடர்பான மனிதாபிமான பிரச்சினைகள் தோன்றியுள்ள நாடுகளில் உலக சுகாதார ஸ்தாபனம் பல்வேறு செயற்றிட் டங்களை மேற்கொண்டு வருகிறது. மேற்படி செயற்றிட்டங்கள் முன்னெடுக் கப்படும் ஜோர்ஜியா, ஆபிரிக்கா, உகண்டா, சூடான், பெனின், குயினியா, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுக ளில் சுகாதாரத்துடன் தொடர்புடைய மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் பாதுகாப்புத்தேடி பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 17 ஆயிரத்துக்கும் அதிகமாக உயர்வடைந்துள்ளது. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேச மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றம் அடிப்படை மருந்துகள் மற்றம் எரிபொருள்களின் விநியோகத்தில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உணவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் அங்கு மோசமான மனிதாபிமான நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது. இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சர்வதேச மனிதநேய தொண்டு அமைப்புகள் மருத்துவ சேவையை வழங்கி வருகின்றன. இத்திட்டங்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் ஆதரவளித்து வருகிறது.

இதேவேளை வன்னிப் பிரதேசத்தின் சுகாதார நிலை குறித்து ஆராய்வதற்காக கடந்த 22 ஆம் திகதி சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் கூட்ட மொன்று நடைபெற்றது. இதில் பல்வேறு அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன. வன்னியில் தற்போது தோன்றியுள்ள சுகாதார நிலைக்கு முகம் கொடுப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (50)

# பொன்னாலைக் கோயிலுக்குச் சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக.26

பொன்னாலை வரதராஜ பெருமாள் கோயிலுக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற இளைஞர்கள் இருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரான தேவசேனாதிபதி சுகந்தன் (வயது-26), ஐயனார் வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த வர்த்தகரான பரமானந்தன்முருகானந்தன் (வயது-34) ஆகிய இருவரையுமே காணவில்லை யென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற தேர்த்திருவிழாவிற்குச் செல்வதாகக் கூறி மோட்டார் சைக்கிளில் இருவரும் புறப்பட்டுச் சென்றனர் எனவும், அதன் பின்னர் நேற்று வரை அவர்கள் வீடு திரும்பவில்லை யெனவும் அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்தமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில்

இதேவேளை-

கொழும்பு, ஐந்துலாம்படிச் சந்தியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

கொழும்பு,டாம் வீதியில் வசிக்கும் பாலசிங்கம் சந்திரகுமாரன் (வயது-52) என்ற குடும்பஸ்தரே கடந்த 22 ஆம் திகதி வெள்ளை வானில் கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகக் கொழும்பில் வசித்துவரும் இவர் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் பணியாற் றுவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிகாலையில் விறகு ஏற்றச் சென்றவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக.26

அதிகாலையில் வீட்டிலிருந்து விறகு ஏற்றுவதற்காக வெளியில் சென்றவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மட்டுவிலில் இடம்பெற்றது.

விறகு ஏற்றுவதற்காக 'லாண்ட் மாஸ்ர'ரில் சென்ற இருவரில் ஒருவரே தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியதோர் குறிப்பிட்ட நபரை கடுமையாகத் தாக்கிவிட்டு கையையும் வாயையும் கட்டிவிட்டு சாவகச்[illegible]ரி வைத்தியசாலைக்கு அருகி[illegible]காண்டு வந்து குண்டுக்கட்[illegible]போட்டு விட்டுச் சென் றுள்ளனர்.

மட்டுவில் வடக்கு, சிவன் கோயிலடியைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம் (வயது 44) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (203–207)

# வலி.வடக்கில் இடம்பெயர்ந்தோர் விவரம் பதியும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.26

வலி.வடக்கில் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்தவர்களின் விவரங்களைப் பதிவுசெய்யும் பணி தற்போது தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றுவருகின்றது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இந்தப் பணி நடைபெற்றுவருகின்றது.

குறிப்பிட்ட சில பிரிவுகளுக்கான பதியும் பணிக்கானத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை கிழக்கு (ஜே/ 227), தெல்லிப்பழை (ஜே/ 228) ஆகிய பிரிவுகளுக்கு எதிர்வரும் வியாழக்கிழமையும்-

துர்க்காபுரம் (ஜே/229), தந்தை செல்வாபுரம் (ஜே/ 230) ஆகிய பிரிவுகளுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமையும்- இந்தப் பணிகள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (202)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 11 | 27.08.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.ப: 08.58வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | பி.இ 04.25 வரை |
| சுபநேரம் : | 04.35-06.05 |
| ராகுகாலம் : | 12.05-01.35 |

# தென்மராட்சியில் இரு பாடசாலைகளுக்கு குழாய்க்கிணறுகள்

யாழ்ப்பாணம், ஒக.26

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளுக்கு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு சமூக சேவைகள் அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி றோமன் கத்தோ லிக்க [illegible] கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே குழாய்க் கிணறு அமைக்கப்படவுள்ளன. (202-207)

# குதூகல சேமிப்புக் கணக்கு ஆரம்ப விழா

மந்திகை, ஒக.26

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் குதூலக சேமிப்புக் கணக்கின் ஆரம்ப விழா நாளை புதன்கிழமை காலை 8.05மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளை முகாமயாளர் எம்.பரமானந் தம் தலைமையில் நடைறெவுள்ள இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை நிகழ்த்துவார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. வரதீஸ்வரன் முதலாவது கணக்கை ஆரம்பித்துவைப்பார். (202-218)

# வேலணையில் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை

குருநகர், ஒக.26

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தீவக வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கென நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவையை அண்மையில் நடத்தியது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தலைமையிலானகுழுவினர்வேலணை பிரதேச வைத்திய சாலையில் இந்த ஆய்வுச் சேவை நடத்தினர்.

வேலணை[illegible]பிரதேச வைத்திய சாலையின் பதி[illegible]றுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (202-51)

# பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.26

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டு வரும் சைவசித்தாந் தத்தில் முதுகலை மாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர் வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசியினை நாளைக்குப் பின்னர் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (202)

# இணைப்பு பெற்ற ஆசிரியர்களின் சம்பளம்

யாழ்ப்பாணம், ஒக.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைப்புப் பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாத சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஆசிரியர்களை உரிய சம்பளப் பட்டியலில் இன்றும் நாளையும் கையொப்பமிடு மாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

# மகா கும்பாபிஷேகத்தையொட்டி வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சமயப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.26

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வகுப்புரீதியாக வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் நாளை புதன்கிழமை பி.ப.2.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். வெற்றி பெற்றவர்களின் விவரம் வரு மாறு:

**தரம் - 1:** சி.கதம்பவி (நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.), உ.திலக்ஸா (மட்டுவில் கமலாம்பிகை வித்தி.), சி.கஜீபன் (போக்கட்டி அ.த.க.பாட.),

**தரம் - 2:** மா.செந்தூரி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சி.டிலக்ஸனா (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), கு.விதுஷா (மட்டுவில் ம.வி.),

**தரம் - 3:** சி.சியானி (மட்டுவில் காந்தநாயகி வித்தி.), ந.ஜெய்மதுசன் (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி.), சி.சிந்துஜன் (கல்வயல் சண்முகானந்தா வித்தி.)

**தரம் - 4:** கோ.வித்தகன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), சி.பிரவீனன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.), க.பத்மஜன் (அல்லாரை அ.த.க.பாட.)

**தரம் - 5:** பா.ஆதிரை (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), க.தயானுகா (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), ம.யாழினி (நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.),

**தரம் - 6:** க.கயல்விழி (கைதடி நவீல்ட் பாட.), சு.கஜயோகினி (நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.),சி.கிரிஷிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி.)

**தரம் - 7:** தே.அனோஜினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா.ஆதவன் (குடமியன் அ.த.க.பாட.), பா.ஜெனித்தா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.)

**தரம் - 8:** தி.ஆரணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செ.துஷாந்தன் (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.), பொ.கஸ்ரோ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் - 9:** ந.கேகயன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), த.துஜிபா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வே.கேஷாளினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.)

**தரம் - 10:** ச.விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கம்சவதனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கு.சரண்யா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் - 11:** து.தர்சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),ந.சுரேகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச.குகப்பிரியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் - 12:** செ.ஸ்ரீபன் (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி.), க.மதீலா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வீ.சதரூபி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி.)

**தரம் - 13:** சி.சிவவாணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), த.துர்க்கா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), இ.சுதர்சினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

(202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 |  | 27 |
| 10 | | 07 |
| 1954 | | 2008 |

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த

### பத்மநாதன் தில்லைநடராசா

பிறந்தவர் இறப்பது நியதி - எனினும் குறுகிய காலத்தில் மறைந்து போனதே<br>
உறுத்துது எமது உள்ளங்களை உருக்குது மனதை நாடோறும்<br>
அன்பான குணமும், பண்பான வார்த்தைகளும்<br>
பொறுக்க முடியவில்லையோ கடவுளுக்கும்,<br>
கொடிய நோய் வந்து வாழப்பொறுக்க முடியாமல்<br>
சென்றனையோ, ஐயகோ!

எமது குடும்பத்தலைவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட உற்றார், உற வினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் நன்றி செலுத்துவதுடன் இன்று (26.08.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(இ/554408)

## Vacancies
# UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts in the Sports Science Unit up to 10.09.2008.

Visiting Lecturer in Physical Education for the following fields
Gymnastic/Netball

Visiting Instructor in Physical Education for the following fields
Gymnastic/Netball

| Post | Rate of payment Rate |
|---|---|
| Visiting Lecturer | Rs.300/- per hour |
| Visiting Instructor | Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self - addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one post/field** should make **separate applications.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**Actg.Registrar**
2008.08.21

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இல.- ஜே/1591 - 6.3.72

# பதவி வெற்றிடம்

1. பதவி: முகாமையாளர்
2. குறியீட்டு இலக்கம்: 115/13
3. சம்பள அளவுத் திட்டம்: 9950 - 85 x 10, 90 x 10 - 11,700/- சங்கம் வழங்கும் இதர படிகளும்
4. தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத் அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பயிற்சிநெறி (சாதாரணம்) சித்தி க.பொ.த. (சாதாரணம்) எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ கணிதம், சிங்களம்/ தமிழ் மொழியினை உள்ளடக்கியதாக 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் அத்துடன் சம்பந்தப்பட்ட வர்த்தகத்துறையிலான பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் (பனை வெல்ல உற்பத்தி, போத்தலில் கள் அடைத்தலில் சிறந்த தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)

வயது: 18 - 45

சங்கம்கோரும் பிணையை ரொக்கமாகவும், ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள், தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் கல்வித் தகைமைச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் போட்டோப் பிரதி இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், தெல்லிப் பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 20.09.2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாமையாளர் 115/13 பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். பூரணப்படுத்தாத விண்ணப்பமும், தகுதியில்லாத விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

*புகையிரத நிலைய வீதி,* **பொதுமுகாமையாளர்.**
*மல்லாகம்.*
*26.08.2008*

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி செல்லத்துரை

*(இளைப்பாறிய ஆசிரியர், சமாதான நீதிவான் J.P)*



பருத்தித்துறை, வேதவனம் ஒழுங்கையை பிறப்பிடமாகக் கொண்டவரும் தும்பளை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி செல்லத்துரை 23.08.2008 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் புத்திரனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவ சம்பு - பொன்னு தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற திருமதி மு.செல்லப்பாக்கியம், சி.பொன்னுத்துரை, திருமதி இ.சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவச்செல்வன், திருமதி இ.திருமகள், திருமதி ஈ.பிறேமாவதி, திருச்செல்வன், அருந்தவச்செல்வன், செல்வச்சந்திரன், ஸ்ரீமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி, இரவீந்திரராஜா, ஈஸ்வரன், நாகநந்தினி, ரேணுகா பாலகுமாரி, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனும் மயூரி, திலக்ஷன், நிலக்ஷன், திபீசன், தனுஷாலினி, பவதாரணி, சானுஜன், சகானா, கௌசிகன், யதுசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.08.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பளை வீதி,*
*பருத்தித்துறை.*

(சி/554407)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர்களை நிர்வாணமாக்கி கொடூரமாகத் தாக்கியது இலங்கைக் கடற்படை

ராமேஸ்வரம், ஒக. 26

கச்சத்தீவுக் கடற்பகுதிக்கு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த 13 இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுற்றிவளைத்துப் பிடித்து அவர்களை நிர்வாணமாக்கி - உருட்டுக் கட்டைகளால் கடுமையாகத் தாக்கி- மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்தினர் - எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுதொடர்பாக வெளியான செய்திகள் வருமாறு:-

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனியன்று 533 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இதில் பல படகுகள் தனுஷ்கோடி 3ஆம் மணல் திட்டி அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தன.

அப்போது திடீரென இலங்கைக் கடற்பகுதியிலிருந்து பிளாஸ்டிக் படகில் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கி, அரிவாள், உருட்டுக்கட்டைகள் போன்ற ஆயுதங்களுடன் வந்தனர். அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே இராமேஸ்வரம் மீனவர்களை நெருங்கினர்.

பின்னர் படகுளுக்குள் புகுந்த படையினர், மீனவர்களை நிர்வாணமாக நிற்க வைத்து, 'இந்தப் பகுதிக்குள் மீன்பிடிக்க வரக்கூடாது' என்று கூறி மிரட்டினர். பின்னர் அவர்களை உருட்டுக்கட்டைகளால் தாக்கிவிட்டு மீன்வலைகளை அறுத்தெறிந்ததோடு, பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்துக்கொண்டு சென்று விட்டார்கள். இதனால் தாக்குதலில் காயமடைந்த மீனவர்கள் சோகத்துடன் இராமேஸ்வரம் திரும்பினர்.

தாக்குதலில் காயமடைந்த இராமேஸ்வரம் கடற்கரை மாந்தோப்பு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஜோசப் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## காஷ்மீரில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு

ஸ்ரீநகர், ஒக. 26

அமர்நாத் கோவில் நில விவகாரப் போராட்டம் தீவிரமடைந்து வருவதால், காஷ்மீர் பகுதி முழுவதும் மீண்டும் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது. பிரிவினைவாத இயக்கத் தலைவர்கள் பலர் முன் எச்சரிக்கை நடவடிக்கையாகக் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## விஷ்வ இந்து பரிஷத் தலைவர் சுட்டுக்கொலை!

### ஒரிசாவில் பதற்றம்; ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு

புவனேஸ்வரம், ஒக. 26

ஒரிசா மாநிலத்தில் விஷ்வ இந்து பரிஷத் தலைவர் மற்றும் அவரது சீடர்கள் 5 பேர் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து அந்த மாநிலம் முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, கொலை நடந்த மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப் படுகிறது.

85 வயதான லக்சுமணந்தா பூசை செய்த சமயம் ஆச்சிரமத்துக்குள் நுழைந்தவர்கள் அவரை குறிபார்த்து சரமாரியாகச் சுட்டனர். அதைத் தடுக்கமுயன்ற 5 சீடர்களும் குண்டு பாய்ந்து கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலையைக் கண்டித்து ஆங்குல் பகுதி முழுவதும் நேற்று முன் தினம் கடையடைப்பு நடத்தப் பட்டது.

# 8 மீனவர் கரைதிரும்பாமையால் கொந்தளிக்கிறது இராமேஸ்வரம்

இராமேஸ்வரம், ஒக்.26

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர் இன்னும் கரை திரும்பாததால், இராமேஸ்வரத்தில் பதற்றம் நிலவுகிறது என்றும் அவர்களைத் தேடி மற்றொரு படகில் மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இராமேஸ்வரத்திலிருந்து தங்கச்சிமடத்தைச் சேர்ந்த யோவான், லயோலா ஆகியோருக்குச் சொந்தமான இரு விசைப் படகுகளில் நியாஸ், நபிசன், சேதுபாண்டி, சாப்னார், அருளானந்தம், மாரி, முனிய சாமி மற்றொரு முனியசாமி உட்பட 8 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

ஞாயிற்றுக்கிழமை கரை திரும்ப வேண்டிய இவர்கள் இன்னும் திரும்பா ததால், மீன் துறை அனுமதி பெற்று மற்றொரு படகில் அவர்களைத் தேடி சில மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.


## சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

பொதுக் கூட்ட அழைப்பு - 2008

மேற்படி சங்கத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் நெறியாளர் தெரிவும் 02.09.2008 மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன .

சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நா.தண்டாயுதபாணி தலைவர் (77468) செயலாளர் பா.மனோகரன்.


## கலைப்பீடத்தில் கலந்துரையாடல்

யாழ். பல்கலைக் கழக கலை வார நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கலைப்பீடத்தின் அனைத்து வருட மாணவர்களையும் சீமுகம் தருமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (1)

## மாகாணமட்ட கூடைப்பந்தாட்டம்; யாழ்.கன்னியர்மடம் சம்பியனானது

வவுனியாவில் நடைபெறும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப் பந்தாட்ட இறுதியாட்டத்தில் யாழ். கன்னியர்மடம் பாடசாலை மாகாண சம்பியனானது. கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தைத் தட்டிச் சென்றது.

மழை காரணமாக நேற்று இடம் பெறவிருந்த ஏனைய போட்டிகள் பாதிக்கப்பட்டன. அந்தப் போட்டிகள் இன்று இடம் பெறவுள்ளன. (01)

## சண்டிலிப்பாய் பிரதேச சமுர்த்தி பயனாளிகள் நாளை ஊர்வலம்

நவாலி, ஒக. 26

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் நாளை சீரணி நாகம்மாள் ஆலயத்தில் இருந்து பிரதேச செயலகத்துக்கு ஊர்வலம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

வழங்கப்படும் நிவாரணம் போதாமையையும் கால தாமதமாக வழங்கப்படுவதையும் சுட்டிக் காட்டி மகஜர் ஒன்றை பிரதேச செயலரிடம் கையளிக்க விருக்கின்றனர்.

அனைத்து சமுர்த்தி பயனாளிகளையும் அன்றைய தினம் காலை 8மணிக்கு சண்டிலிப்பாய் நாகம்மாள் ஆலயத்தில் கூடுமாறு சண்டிலிப்பாய் பிரதேச மகா சங்கத்தினர் கேட்டுள்ளனர். (1-100)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் கடமையாற்றும் நா.யோகேந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வைரரத்தினம் நாகலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். திட்டப்பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்னதான சபைக்கு மண்டபம் அமைக்க நிலம் அன்பளிப்பு செய்த சிவஸ்ரீ சி.சோதிரத்தினக்குருக்கள் அவர்களின் அன்பு மாமி

**திருமதி பாலசௌந்தரி அருணாசலக்குருக்கள்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னதான நிர்வாக சபை,
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
பன்னாலை, தெல்லிப்பழை. (77464)

## 2 ஆம் ஆண்டு கண்ணீர்த் துளிகள்



தோற்றம் 02 - 09 - 1980

மறைவு 19 - 08 - 2006

**அமரர் சூரியபாலன் மயூரதன்**

இரண்டு மாதங்கள் போலிருக்குது
இரண்டு ஆண்டுகள் ஒழிந்துவிட்டன
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
அணையாது உன் நினைவு.

14, பழம் வீதி,
கந்தர்மடம். (77473)
தகப்பன்,
சகோதரர்கள்.

## அறைகள் வாடகைக்கு

யாழ் நகரில் மின்சார வசதியுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- ந. விக்னேஸ்வரன் (ஆச்சாரி)
426 (302) கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

பெரேரா ஒழுங்கை, கொழும்பு எனும் முகவரியு டைய ஸ்ரீபதி திலகராஜசிங்கம் என்பவரது தே.அ.அட்டை (443603280V) 18.08.2008 அன்று முத்திரைச் சந்தி யாழ்ப்பாணத்திற்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ரஜினி பீடா ஸ்ரோர்ஸ், வே.சுந்தரலிங்கம், இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி எனும் முகவரிக்கு அனுப்பியோ தந்தோ உதவவும் .

பெ.திலகராஜசிங்கம்
C.E.B (பாலா), வல்வெட்டி.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள SHARP போட்டோக் கொப்பி இயந்திரங்கள் (SF 1020, 1016,1118) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இலக்கம்.

TP:- 0779905305,0212229133

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சுப்பிரமணியம்



மட்டுவில் வடக்கு, தோப்பு வீதியைப் பிறப்பிடமாகக்கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் 22.08.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் பாலபூபதி, புஸ்பராணி, ஜெயலலிதா (வன்னி), சித்திராதேவி (கனடா) , ஞானகிதேவி, மஞ்சுளாதேவி, உமாதேவி (பிரான்ஸ்), சிவசிவா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்மா, பொன்னுச்சாமி, ஆச்சிமுத்து, முத்துப்பிள்ளை, கனகம்மா, சிவக்கொழுந்து, ஆறுமுகம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாதம், சிவகுமார், தேவராசா, மகேந்திரன், அமுதன், ஞானாவதி, றஜீபன் ஆகியோரின் அன்பு மாமனும் தர்சினி, றமேஷ்குமார், சுரேஸ்குமார், சிவாஜினி, நிசாந்தன், கஜந்தன், கமல்ராஜ், சரண்ராஜ், நிரோஜனா, நிதுஷனா, அருண்ராஜ், விமல்ராஜ், செரில், கிறிஸ்டோபர், கிறிஷத், அன்பரசி, மகீசன், சுலக்ஷன், அகிலன், கபிலேசன், அமுதரசி, அன்பழகன், அனுசியா, ஆதவன், உமாவதி, சிவானுஜா, நிலவன், நிலாவன்ஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.08.2008 இல்அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் மட்டுவில் ஊரிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:
சிவா: 0094 776341405(மகன்),
உமா: 0033650180 927(மகள்),
சுரேன்: 0094 771235658(பேரன்).

(சி-554416)

### சுப்பையா நாகேந்திரம்



மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நாகேந்திரம் 16.08.2008 அன்று பிரான்ஸ் நகரில் மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - ஆசைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தம்பிராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும் மங்கையர்க்கரசியின் (ஆசிரியை, யா/கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயம்) அன்புக் கணவரும் டிலக்ஸ்(யா/ வதிரி திரு இதயக் கல்லூரி), கிசோக்(யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வளர்மதி',
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (சி-554417)

தகவல்:
திரு.திருமதி பாலகிருஷ்ணன்
கலைவாணி(மைத்துனி).

### இலகுப்பிள்ளை சின்னையா தம்பிமுத்து

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த இலகுப்பிள்ளை சின்னையா தம்பிமுத்து (ஓய்வுபெற்ற கணக்காளர்) நேற்று(25.08.2008) திங்கடகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் சாவித்திரிதேவி (ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), லோகநாதன்(Global Rubber Industries, கொழும்பு), சாரதா தேவி, இராஜமனோகரன், இராஜமனோகரி (ஆசிரியை, யா/ வயாவிளான் ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சந்திரகுமாரி ன் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2008) புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு ஊரெழு கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி முன்பள்ளி ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்று வரும் பெருந்திருவிழாவில் நேற்று கைலாசவாகனத்திருவிழா இடம்பெற்றது.

முருகப்பெருமான் வள்ளிதெய்வானை சமேதரராக கைலாசவாகனத்தில் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பதையும் திருவிழாவில் கூடியிருந்த பக்தர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# தமிழக மீனவரின் உரிமைகளை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாராகவே உள்ளது

## கருணாநிதியிடம் பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு

சென்னை, ஒகஸ்ட் 26

கச்சதீவு ஒப்பந்தம் உறுதிசெய்த தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசு தயாராக இருக்கிறது என்று தான் நம்புவதாக இந்திய தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் கருணாநிதியை நேற்றுச் சென்னையில் சந்தித்த பின்னர் நாராயணன் செய்தியாளர்களுடன் கலந்துரையாடியபோதே இந்தத் தகவலைக் கூறினார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் விரைவில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் நாராயணன் சொன்னார்.

இது குறித்து அவர் மேலும் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டவை வருமாறு:-

கொழும்பில் இடம்பெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியிருந்தார்.

இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்த மறுநாள் அதிகாரிகள் மட்டத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பில் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது தமிழக மீனவர்கள் மீது இனிமேல் துப்பாக்கிச்சூடு நடத்தப்படமாட்டாது. சிறைப்பிடிக்கப்படுவோர் விரைவில் விடுவிக்கப்படுவர். அத்துடன், தமிழக மீனவர்கள் மனிதநேய அடிப்படையில் நடத்தப்படுவார்கள் என அங்கு இலங்கை அரசின் சார்பில் உறுதியளிக்கப்பட்டது.

எனவே, 1974 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தம் உறுதி செய்த தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையை இலங்கை அரசு ஏற்கத் தயாராக இருக்கிறது என நான் முழுமையாக நம்புகின்றேன் - என்றார்.

தமிழக முதல்வருக்கும், நாராயணனுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பில் மீனவர் பிரச்சினை உட்பட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(11ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தி)

# ஐ.தே.கட்சி எம்.பியின் அலுவலகம் ஆனமடுவவில் தீ வைத்து எரிப்பு

கொழும்பு, ஒக. 26

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டாரவின் ஆனமடுவ அலுவலகத்தை இனந்தெரியாத குழுவொன்று தீமூட்டி எரித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இனந்தெரியாத கும்பலொன்று பாலித எம்.பியின் அலுவலகத்தை தாக்கிச் சேதப்படுத்திய பின்னர் அதற்குத் தீமூட்டியுள்ளது.

அலுவலகம் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாகவும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமடைந்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசு ஆதரவாளர்களே இந்தச் சம்பவத்திற்கு காரணம் என பாலித ரங்க பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னரும் இரு தடவைகள் தனது அலுவலகம் தாக்கப்பட்டதாகவும் அதன் போதும் பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# கள்ள நோட்டு அச்சடிக்கும் நிலையம் சுற்றிவளைப்பு

பதுளை, ஒக. 26

கள்ள நோட்டுகளை அச்சடிக்கும் நிலையமொன்றைப் பதுளைப் பொலிஸார் அண்மையில் சுற்றி வளைத்தனர். அதன் போது அங்கிருந்து 2000,1000, 500, 100 ரூபா நோட்டுக்களை தயாரிப்பதற்கான வர்ணம் தீட்டப்பட்ட காகிதக் கட்டுக்கள், நவீன ரகத்திலான அச்சு இயந்திரம் மற்றும் சில உபகரணங்களை அவர்கள் கைப்பற்றினர்.

இதேவேளை அங்கிருந்த 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் வங்கியொன்றில் பணிபுரியும் நிறைவேற்று அதிகாரியொருவரின் மகனும் அடங்கியிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் நீண்டகாலமாகவே இங்கு கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு வந்துள்ளன எனவும் இத்துடன் பலர் தொடர்புபட்டிருக்கலாம் எனவும் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

# வடமராட்சியில் கணனிப்பயிற்சிநெறி ஆரம்பம்

வடமராட்சிப் பிரதேச இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி கணனி, ஆங்கிலப் பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கென வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆலயத்தினர் கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இன்னைய நிலையிலேயே யாழ்ப்பாணத்துக்கோ, கொழும்புக்கோ சென்று இப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டிய வடமராட்சி இளைஞர், யுவதிகளுக்கு இச்செயற்பாடு வரப்பிரசாரமாக அமைந்துள்ளது. இந்தப் பயிற்சிநெறி எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் -

பயிற்சிகளைப்பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எஸ்.தியாகராஜா (இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர்), இயக்குநர், யாழ்ப்பாணக்கல்லூரி, வடமராட்சிப் பிரிவு, ஆத்தியடி, பருத்தித்துறைக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்

ஒன்று கூடல்

*முக்கிய விடயம் சார்பாக இன்று (26.08.2008) மு.ப 10மணியளவில் கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறு ஆசிரியர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.*

நன்றி. ஆசிரியர் கழகம்.



O/L 2008 மாணவர்களுக்கு

வெளிவந்து விட்டது




S.M.கன்னகுமார் ஆசிரியரின்

வரலாறு - 11

600 க்கு மேற்பட்ட வினாக்களையும் விளக்கத்துடன் கூடிய விடையுடன் வெளிவந்துள்ளது. தரம் 10 வரலாற்றுக்கு வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி.

எனது வெளியீடுகளை சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


## பொதுத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத் தேர்தலுக்குச் செல்லக் கூடிய வலுவான நிலையில் அது காணப்படுவதாக அவர் சொன்னார். எனினும் உடனடியாக நாடாளுமன்றைக் கலைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள மாகாணசபைகளைக் கலைக்கும் எந்த முடிவும் ஆளுநர்கள் முதலமைச்சர்களாலேயே எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரு மாகாணசபைகளிலும் கிடைத்துள்ள வெற்றி விடுதலைப் புலிகளுக்கு எதிரான அண்மைக்கால இராணுவ வெற்றிகளுக்கும் அரசின் பொருளாதார கொள்கைகளுக்கும் கிடைத்துள்ள அங்கீகாரம் என்றும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது புரிந்திருக்க வேண்டும். எனினும் அவர்கள் பொதுத் தேர்தலை நடத்தச் சொல்லி அரசுக்கு சவால் விடுகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தயாரென்றால் மோதிப் பார்க்க அரசும் தயார்தான். வேண்டுமானால் இன்னும் மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்த அரசு தயார்'' - என்றார் அமைச்சர். (அ-சி)

## வன்னி மீதான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்துடன் தமது நடவடிக்கையில் ஈடுபட்டுகின்றனர். அவர்களின் இலக்கு எதிர்பார்த்த காலத்துக்கு முன் நிறைவேறப்போகிறது - என்றார் அவர். (அ-1)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு ஆசனங்களைப் பெற்றுள்ளோம்.

அரசின் வன்முறைகளுக்கு மத்தியில் தான் இந்தச் சாதனையைப படைத்திருக்கிறோம். நாம் நியமித்த முதலமைச்சர் வேட்பாளர்களை மக்கள் முழுமையாக ஏற் றுள்ளனர்.

அரசு சார்பில் போட்டியிட்ட முதலமைச்சர் வேட்பாளர்களைவிட எமது முதலமைச்சர் வேட்பாளர்களே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர். இது அரசுக்குப் பெரும் சவாலாகும்.

எம்மைத்தான் இரண்டு மாகாண மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற உண்மையை அரசு இனியாவது விளங்கிக் கொள்ளவேண்டும்.

அரசு கட்டுக்கடங்கா வன்முறைகளை நடத்தியும் அரசு சொத்துக்களைப் பயன்படுத்தியும் பெற்ற இந்த வெற்றி அமோக வெற்றியல்ல.

அரசு முடிந்தால் இனியாவது நாடாளுமன்றத்தைக் கலைத்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும். இதை நாம் அரசுக்கு சவாலாக முன்வைக்கிறோம்.

அப்படித் தேர்தலை நடத்துவதாயின் அதற்குமுன் அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஆணைக்குழுக்கள் அனைத்தையும் ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அப்போதுதான் நீதியான தேர்தலை எதிர்பார்க்க முடியும்.இல்லையேல் தேர்தல் வன்முறைகள் நிறைந்ததாகவே இருக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலை அரசு நடத்தினால் மக்கள் அத்தேர்தலில் நிச்ச யம் அரசுக்கு தக்கபாடம் புகட்டுவர் - என்றார்.

## திஸநாயகத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர் தற்சமயம் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தாலும் அவர் தொடர்பான தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரம் தொடர்ந்து செல்லுபடியாகும். அவ்வாறு தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் உள்ள ஒருவரைப் பிணையில் விடுவிக்கும் அதிகாரம் மேன் நீதிமன்றுக்கு இல்லை.'' - என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையை நீதிபதி ஏற்றுக் கொண்டார். அதனால் திஸநாயகத்துக்குப் பிணை மறுக்கப்பட்டது.


விற்பனையாகிறது

A/L 2008

பொதுச்சாதாரணப் பரீட்சைவழிகாட்டி

இதனுடன்

இலவசப்பிரதி

மித முக்கிய பொது அறிவு

P.கமல்தாசன் & உமாசங்கர்

பூபாலசிங்கம், அவ்வை, ...


## மரண அறிவித்தல்

### விநாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி

(அதிபர், கைதடி நுணாவில் G.T.M.S)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வாழ்விடமாகவும் கொண்ட வி.தெய்வேந்திரமூர்த்தி (24.08.2008) ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - சுந்தரம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற கல்வயல் முருகேசு ஆசிரியர் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், யோகாம்பிகையின் (முகாமைத்துவ உதவியாளர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை) கணவரும், ஜெயந்தன் (பொறியியலாளர்), ஜெயரூபி (பொறியியல் பீடம் 4ம் வருடம் பேராதனை), ஜெயகரன் (I.T 1ஆம் வருட மாணவன், மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரமூர்த்தி, ஏரம்பமூர்த்தி, இராஜேஸ்வரியம்மா, பரஞ்சோதிமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணமூர்த்தியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2008) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் உருத்திர பூமியில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.